பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி




பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 30 வியாழக்கிழமை (12.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 055

# வன்னியில் இருந்து வெளியேறுமாறு வைத்தியர்கள், தாதிகளுக்கு உத்தரவு!

## சுகாதார அமைச்சு விடுத்தது

(கொழும்பு)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 8 மருத்துவர்களையும் ஆயிரம் வரையான தாதியர்கள் மற்றும் பணியாளர்களையும் அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு சுகாதார அமைச்சு கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. இது இறுதி எச்சரிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது என தமிழ்நெற் தெரிவித்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் மீது கனடா அக்கறை முகர்ஜியுடன் வெளி.அமைச்சர் பேச்சு

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு மூலமாக தீர்வு உடனடியாக முன்வைக்கப்படவேண்டும் என இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையை பாதித்திருக்கும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவந்து, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அதிகாரப்பகிர்வே ஒரு சிறந்த தீர்வாக அமையும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி மீண்டுமொரு முறை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இலங்கை விடயம் தொடர்பாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கனோன், இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

இலங்கையின் வடபகுதியிலுள்ள மக்களின் நிலைமைகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் மறுப்பு

### றொய்ட்டர் தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதலிலேயே திங்களன்று சுதந்திரபுரம் பகுதியில் பொதுமக்களும் படையினரும் கொல்லப்பட்டதாகப் படைத்தரப்பு பொய்ப் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வந்த மக்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே அவர்கள் கொல்லப்பட்டனர் என தமிழ்நெற் இணையத்தளத்தை மேற்கோள் காட்டி றொய்ட்டர் செய்தித் தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை எனத் தெரிவித்து றொய்ட்டரில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாளாந்தம் அப்பாவிப் பொதுமக்கள் பல நூற்றுக் (12ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீதான தாக்குதலுக்கு இராணுவம் பொறுப்பல்ல

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் இருந்து வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி வந்த பொதுமக்கள் மீது முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 சிவிலியன்கள் கொல்லப்பட்டதுடன், 75 பேர் காயமடைந்துள்ளதாகவும் இந்தத் தாக்குதலுக்குத் தாம் பொறுப்பல்ல என்றும் இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

போர்ப் பிரதேசத்தில் இருந்து சிவிலியன்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதைத் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் மீது ஐ.தே.கவுக்கு எவ்வித அக்கறையும் இல்லையாம்

### அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் எந்தவொரு தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவிக்கவில்லை. அவர்களுக்கு தமிழ் மக்கள் மீது எந்தவித அக்கறையும் இல்லை என்பது இதிலிருந்து தெரிகிறது என ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 832 சிவிலியன்கள் வாழ்ந்ததாகக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் இன்று (நேற்று) வரை 32 ஆயிரத்து 596 பேர் வரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் ஆயிரத்து 704 பேரும், 2009இல் 3 ஆயிரத்து 448 பேரும் ஜனவரியில் இருந்து நேற்றுவரை 32 ஆயிரத்து 596 பேரும் இவ்வாறு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## குருவிக்குளம் சந்தி படையினர் வசம்

(கொழும்பு)

முல்லைத்தீவு குருவிக்குளம் சந்தியை பாதுகாப்புப்படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு பிரதேசம் முழுவதையும் புலிகளிடமிருந்து முழுமையாக விடுவிக்கும் நோக்குடன் முன்னேறிவரும் இராணுவத்தின் 57-வது படைப்பிரிவினரே குருவிக்குளம் சந்தியை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

ஏ-35 வீதியில் (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வன்னியிலிருந்து வெளியேறவில்லை

### அதன் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர்கள் முற்றாக வன்னியிலிருந்து வெளியேறவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம், புதுமத்தாளன் பகுதியிலிருந்து நோயாளர்களை அழைத்து வருவதற்காக சில பணியாளர்கள் கப்பலில் வந்தனர். அவர்கள் மீண்டும் முல்லைத்தீவுக்குத் திரும்பிச் செல்வார்கள் என்று பேச்சாளர் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் பணியாளர்கள் முல்லைத்தீவிலிருந்து வெளியேறிவிட்டதாக வெளியாகியிருந்த தகவல்கள் குறித்து கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதே வேளை விடுவிக்கப்படாத பகுதிகளில் மருத்துவ (12ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு வலயரீதியாக நேர்முகத் தேர்வு

### ஒரு மாத காலத்துக்குள் நியமனம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கும் பிரச்சினையை ஒரு மாதகாலத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.


வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமனம் வழங்க வடக்கு மாகாண விஷேட செயலணித் தலைவரும் சமூக சேவைகள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கைக்கு அமைய கல்வி வலய ரீதியாக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்களின் ஒரு தொகுதியினர்
படங்கள் : பாதுகாப்பு அமைச்சு



முல்லைத்தீவிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரைப் படங்களில் காணலாம்.

# இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர் நேர்முகப் பரீட்சை கொழும்பிலும் நடக்கும்

(கொழும்பு)

இலங்கை வங்கியின் முகாமைத்துவ பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பிலும் தோற்ற முடியுமென இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந் நேர்முகப் பரீட்சையை யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர், எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பு-01, 26ஆம் மாடியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்துக்கு பிற்பகல் 3.00 மணிக்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை 021-2222735, 021-2223985 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரி வித்தார். (ச)

## சிரட்டைப்பயிற்சி நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் சோஅ நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடைபெற்ற சிரட்டைப்பயிற்சியின் நிறைவு விழா இன்று காலை 9.30 மணிக்கு இருபாலை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி எஸ்.பிரேமினி பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார். (ச)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ. ஸ்ரீகிருஷ்ணானந்தசர்மா கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே. வல்லிபுரம் கலந்து கொள்வதுடன் பரிசில்களை வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி ரவிச்சந்திரிக்கா கிருஷ்ணானந்த சர்மா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ-2-19)

# வெளிநாட்டுத் தூதுவர்கள் வன்னி செல்ல விடுத்த கோரிக்கை அரசினால் நிராகரிப்பு

(கொழும்பு)

வன்னிக்குச் செல்ல அனுமதிக்குமாறு சுவிட்சலாந்து மற்றும் டென்மார்க் தூதுவர்கள் விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

விசுவமடு பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாமில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கொஹண கூறினார்.

கடந்த வருடம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சமயம் இத்தாலியத் தூதுவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்திருந்தமையால் அரசாங்கம் அக்கறையுடன் இருப்பதாக அவர் கொழும்பு ஊடகமொன்றிடம் கூறினார்.

அதேநேரம், அண்மையில் இராணுவத்தினரால் வன்னியில் விடுவிக்கப்பட்ட பகுதிக்குச் செல்வதற்காக ஒரு தொகுதி சர்வதேச ஊடகவியலாளர்கள் கொழும்பில் தங்கி யிருப்பதாகவும் அவர்களை வன்னிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டிருப்பதாகவும் கொஹண தெரிவித்தார். (ச-5)

# வடக்கின் துரித அபிவிருத்திக்கு 4 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வடக்கின் வசந்தம் உதயமாகும் காலம் கனிந்து வருகின்றது என்றும் வடக்கின் துரித அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் ஏனைய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி 4 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி இருப்பதாகவும், அதேநேரம் அயலாக நட்பு நாடான இந்தியாவின் உதவிகளும் மேற்படி திட்டத்திற்கு நிச்சயமாகக் கிட்டுமெனவும் புலம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்ற எமது உறவுகள் தங்களால் இயன்றளவு உதவிகளை செய்வதற்கு முன்வருவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியின் தேவைகள், குறைபாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் உதவிகள் தற்போது வழங்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வருவதா கவும் இவ்வாறான உதவிகளை பயன்படுத்தி பல்வேறு மக்கள் நலன் சார்ந்த பணிகளை மிக இலகுவாக முன்னெடுக்க இயலும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டில் அடிப்படை மாற்றங்களை உருவாக்கி எமது மக்களின் வாழ்க்கை நிலையை கௌரவமானதாக உறுதிப்படுத்தும் வகையில் தான் மேற்கொண்டு வருகின்ற வேலைத்திட்டங்களுக்கு பொது மக்களின் பங்களிப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை இங்கு சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இதே நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால் யாழ். குடாநாட்டை முழுமையாக மாற்றி அமைப்பதுடன் வடக்கின் ஏனைய பகுதிகளையும் துரிதமாக முன்னேற்ற இயலும் என்றும் கூறியுள்ளார். (ச)

# ‘மூலிகைத் திறவுகோல்’ நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

டாக்டர் சே.சிவசண்முகராஜா எழுதிய "மூலிகைத் திறவுகோல்" நூல் அறிமுக விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ். மாநகரசபை பிரதம சித்த வைத்திய அதிகாரி ப.சுரேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை கைதடி சித்த போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஐ.ஜெபநாமகணேசனும் வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் திருமதி சி.பஞ்சராஜா, யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி க.தேவராஜா, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தி.குமுதரஞ்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்புரையினை யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத்தலைவர் கு.மிகுந்தன் சிறப்புரையாற்றுவார்.

நூல் வெளியீட்டினையும் நூல் வெளியீட்டுரையினையும் யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார். நூல் அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவு பேராசிரியர் சு.பவானி, யாழ். பல்கலைக்கழக தாவரவியற்துறை, விஞ்ஞானபீட தலைவர் திருமதி என்.ரவிமன்னன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிறைவுரையினை நூலாசிரியர் டாக்டர் சே.சிவசண்முகராஜா நிகழ்த்துவார். (ச-14)

# இன்று ஒரு தகவல்

## உடம்புக்குள் ஒரு போட்டி

"யார் பெரியவன்?"

இது உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கும் ஒரு போட்டி. இரண்டு மனிதர்களுக்கிடையிலும் இந்தப் போட்டி உண்டு.

சரி... ஒரு மனிதனுக்குள் இந்தப்போட்டி வந்தால் அது எப்படி இருக்கும்?

அப்படிப்பட்ட ஒரு கற்பனை இது. ஐம்பொறிகளுக்குள் யார் பெரியவன் என்ற போட்டி வந்துவிட்டதாம். உடனே கடவுளிடம் போய் முறையிட்டார்களாம்.

"ஒரு மனிதன் தனக்கு என்ன வேண்டும் என்பதைக் கேட்டுத் தான் வாங்குகிறான். பேசினால் தான் அவன் தன்னுடைய தேவைகளை அடுத்தவர்களிடம் சொல்ல முடியும். இன்றைக்கு எதையும் கேட்டு வாங்கினால் தான் உயிர் வாழ வேண்டியிருக்கிறது. பேச்சு இல்லையென்றால் எல்லாம் போச்சு. அதனால் நான் தான் பெரியவன்" என்றது பேசும் சக்தி.

"முதலில் ஒரு பொருளைப் பார்த்தால் தானே கேட்க முடியும். அதனால் பேச்சைவிட பார்வைதான் முக்கியம். ஆகவே நான் தான் பெரியவன்"என்றது பார்க்கும் சக்தி.

"பார்ப்பதை விட, பேசுவதைவிட கேள்விஞானம் தான் ஒரு மனிதனை உருவாக்குகிறது. நம்மைப்பற்றி அடுத்தவன் என்ன பேசுகிறான் என்பதைக் கேட்டால் தான் நம்மைத் திருத்திக் கொள்ள முடியும். அதனால் நான் தான் பெரியவன்" என்றது கேட்கும் சக்தி.

ஒரு பொருளைப் பார்த்தாலும் சரி... அது சம்பந்தமாக பேசினாலும் சரி... கேட்டாலும் சரி.. அதைப்பற்றிச் சிந்தித்தால் தான் அதற்கு ஏற்றாற்போல் செயற்பட முடியும்.

வந்து சேரும் விஷயத்தை அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் பக்குவப்படுத்திக் கொடுப்பது மனம் தான். அதனால் நான் தான் பெரியவன் என்றது சிந்திக்கும் சக்தி.

மூச்சு விடும் சக்தி எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு சும்மா இருந்தது. "நீ ஒன்றும் சொல்லவில்லையா?"என்று கேட்டார் கடவுள். அது எதுவும் சொல்லாமல் ஒரு பெரு மூச்சு விட்டது.

கடவுள் யோசித்தார், பின்னர், "இதோ பாருங்கள்... உங்களுக்குள் யார் பெரியவர் என்பதை முடிவு செய்யலாம். அதற்காக ஒரு சின்ன சோதனை வைக்கிறேன்.

மனித உடம்பிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் கொஞ்ச நேரம் பிரிந்து இருங்கள். யார் பிரிந்து இருக்கும் போது மனிதன் மிகவும் சிரமப்படுகின்றானோ... அவர் தான் பெரியவர் என்றார்.

சரி என்று எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். முதலில் பேசும் சக்தி விலகிப்போனது. ஒருமாதம் அவனால் பேச முடியாமல் போய்விட்டது. அவ்வளவுதான். உயிர் வாழ்வதில் ஒன்றும் சிக்கல் இல்லை. கையால் சைகை காட்டி வேண்டியதை வாங்கிப் பிழைத்துக் கொண்டான்.

பின்னர் பார்க்கும் சக்தி மட்டும் பிரிந்து போய்விட்டது. மனிதனால் எதையும் பார்க்க முடியவில்லை. அவ்வளவு தான். தொட்டுப்பார்த்து... வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

அதன் பின்னர் கேட்கும் சக்தி மட்டும் விலகிப் போய் விட்டது. மற்றவர்கள் சொல்வது, பேசுவது அவனுக்குக் காதில் விழவில்லை. அதனால் பாதுகாப்பாக இருந்தான்.

அதற்குப்பின் மனம் விலகிப் போய்விட்டது. மனிதன் சிந்திக்கும் சக்தியை இழந்தான். சித்தப்பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான். யாரும் அவனை நெருங்கவே இல்லை. ஆனாலும் பரிதாபப்பட்டு சிலபேர் உணவு கொடுத்தார்கள். அவன் பிழைத்துக் கொண்டான்.

கடைசியாக வந்தது மூச்சுவிடும் சக்தி. இப்பொழுது அது மனித உடம்பை விட்டு விலக ஆரம்பித்தது. அவ்வளவு தான். கண்பார்வை மங்க ஆரம்பித்தது. காது கேட்கும் சக்தியை இழந்தது. பேசமுடியவில்லை. சிந்தனை கலங்கி விட்டது. மனிதன் கீழே விழுந்து விட்டான்.

இப்பொழுது அந்த நான்கு பொறிகளும் கெஞ்ச ஆரம்பித்தது. "மூச்சுவிடும் சக்தி"யைப் பார்த்து!

"தயவு செய்து நீ இந்த உடம்பை விட்டுப் போய்விடாதே. நீ போய் விட்டால் இந்த உடம்புக்கு மரியாதை இல்லை. நாங்களும் செயல்பட முடியாது என்பதைப் புரிந்து கொண்டோம். நாங்கள் செய்வது வெளியே தெரிகிறது. உன்னுடைய பெருமை வெளியே தெரிவதில்லை." என்று எல்லாம் சேர்ந்து கொண்டு கூறின.

கடவுளுக்கு தீர்ப்பு சொல்ல வேண்டிய அவசியமே ஏற்படவில்லையாம். இந்தக் கதையில் இருந்து நாம் புரிந்து கொள்வது என்ன?

மிகவும் முக்கியமானவர்களெல்லாம் அவர்கள் செய்யும் காரியத்திலேயே கருத்தாக இருப்பார்கள். அவர்கள் செய்வதை விளம்பரப் படுத்திக் கொள்வதில்லை. அடக்கமாக செய்யப்படும் பணிதான் அவசியமான பணியாகஅமையும். இதுதான் இதிலுள்ள தத்துவம்.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பற்றி மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''என்பையனும் அப்படித்தான். செய்யும் காரியத்தில் கருத்தாக இருப்பான். அவன் செய்வதை விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை. மிகவும் அடக்கமாக செய்வான்" என்றார்.

"அப்படி என்னதான் செய்கிறான்?" என்று கேட்டேன்.

"பணத்தை எங்கே வைத்தாலும் எடுத்து விடுகிறான்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு மாகாண பொதுச் சேவையில்

## சமூக சேவை, சிறுவர் நன்னடத்தை மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் சமூக சேவை உத்தியோகத்தர் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கான நியமனத்திற்கு 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தெரிவு செய்யப்பட்டமை தொடர்பான கடிதங்களை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர், அலுவலகத்தில் உடன் பெற்றுக் கொள்ளும் வண்ணம் யாழ். பிராந்திய ஆணையாளர் கேட்டுக் கொள்கின்றார்.

தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு,

கு. சிவநந்தினி – கொக்குவில், ச. சதீஸ் – திருநெல்வேலி வடக்கு, ப. ஜங்கரன் – அளவெட்டி கிழக்கு, கு. சகிக்குமார் – நவாலி தெற்கு, ச. மயூரதன் – அளவெட்டி மத்தி, த. ஹரிஷானந் – அரியாலை, ச. சிறிகாந்தன் – நாவலர் வீதி, யாழ்ப்பாணம், அ. றெஜினோல்ட்ராஜ் – தெல்லிப்பளை, கு. இந்திரகுமார் – சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம், கா. மணிவண்ணன் – சுதுமலை வடக்கு. த. சைலஜா – செம்மணி வீதி, நல்லூர், யோ. ஜெயந்திதேவி – பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், ஞா. சியாமளா – புத்தூர் கிழக்கு, ப. சிவ ஞான வேல் – இணுவில் தெற்கு, சு. சிவலோக நாயகி – புன்னாலைக் கட்டுவன் தெற்கு, தி. யேசுதாஸ் – யூலன் வீதி, அச்செழு, செ. சுகந்தராஜ் – கொழும்புத்துறை, கு. கேதினி – கந்தர்மடம், ஜெ. கலைந்தினி – நீர்வேலி, பி. ஆனந்தி – திருநெல்வேலி, தி. நவநீதன் – நல்லூர் வடக்கு, சு. அன்றூ – சுன்னாகம், கு. துஷ்யந்தி – கந்தர்மடம், சி. சந்திரரூபன் – அச்சுவேலி தெற்கு. (ஓ-6)

## சைவ பரிபாலன சபையால் நடத்தப்பட்ட பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் புண்ணிய நாச்சியம்மையார் தினம் சார்பாக நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரம் சைவ பரிபாலன சபை தேர்வு செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசு பெறுவோர் விபரம் வருமாறு,

**பண்ணிசைப்போட்டி**

**கீழ்ப்பிரிவு**

ச. அருந்ததி – யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, ந. மதுராங்கனி – யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, தா. துளசி – சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

**மத்திய பிரிவு**

ம. சகானா – மாகாஜனக் கல்லூரி, அ. விஜிதா – சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, நா. துஸ்யந்தி – இராமநாதன் கல்லூரி.

**மேற்பிரிவு**

கு. மயூரதி – யாழ். இந்து மகளிர் கல்லூரி, பே. டினேஷன் – யாழ். இந்துக்கல்லூரி, ரா. மேருஷா – மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**திருக்குறள் மனனப்போட்டி**

**கீழ்ப்பிரிவு**

லோ. ஸ்ரீகர்சன் – யாழ்ப்பாணக் கல்லூரி, ச. சஞ்சிகா – வட இந்து மகளிர் கல்லூரி, வ. டிலானி – சண்டிலிப்பாய், இந்துக்கல்லூரி.

**மத்திய பிரிவு**

வி. தேவசேனா – வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சி. பராபரன் – யாழ். இந்துக் கல்லூரி, க. அபர்ணா– வட்டு மத்திய கல்லூரி.

**மேற்பிரிவு**

கு. யசிந்தா – கொக்குவில் இந்துக்கல்லூரி, அ. தர்சிகரூபன் – இணுவில் மத்திய கல்லூரி, க. சிதம்பரபாணன் – தொல் புரம் விக்னேஸ்வர வித்தி. (ஓ-2)

## இலங்கைப் பிரச்சினையில் பிரெஞ்சு அரசு அக்கறை

பிரெஞ்சு நாட்டின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் ழான் மரியே போக்கல் நேற்று முன்தினம் புதுச்சேரி வந்தார். அங்கு செய்தியாளரிடம் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழர்களின் மறுவாழ்வுக்கு அங்குள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் நிலவும் பிரச்சி னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். இலங்கையில் ஒருமைப்பாடு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் பிரெஞ்சு அரசு அக்கறையாக இருக்கிறது என்றார். (ஓ)

## இராசி பலன்

12.02.2009
(தை30, வியாழக்கிழமை)
திருதியை பிற்பகல் 5.10 வரை
உத்தரம் பின்னிரவு 12.31 வரை
இராகுகாலம் 2.04-3.34
சுபநேரம் 8.04-9.34
சண்டேசுவரர் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, தேகநலன், அதிகாரம். |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, சொத்துப் பிணக்கு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், தன்னம்பிக்கைக் குறைவு, புதிய முயற்சி. |
| கடகம் | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | மாதர் நட்பு, பொருள் விரயம், எடுத்த காரியம் தாமதமாகும், சிந்தனை மிகுதி. |
| கன்னி | சயன சுகம், தேகநலன், புதிய முயற்சி, ஜனவசியம். |
| துலாம் | பிதா சிந்தை, பிரயாண அலைச்சல், சுபசெலவு, வேலைச்சுமை. |
| விருச்சிகம் | தொழில் நன்மை, குடும்ப சுகம், பிறர் உதவி, தனவரவு. |
| தனுசு | அதிகாரம், சுபநிகழ்வு, உற்சாகம், பிறர் உதவி. |
| மகரம் | உடல் உழைப்பு, அச்சமான நிலை, கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கும்பம் | பிரயாணக் கஷ்டம், வீண்பகை, காரிய தாமதம், போசன சுகம். |
| மீனம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பணவருவாய், முயற்சி கை கூடும். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 280 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-110 |
| பச்சைமிளகாய் | 180 | 200 |
| தக்காளி | 120 | 180 |
| அவரை | 40 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 |
| கோவா | 40 | 70 |
| கரட் | 45 | 70 |
| பூசணி | 30 | 60 |
| புடோல் | 35 | 60 |
| வாழைக்காய் | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 35 | 40 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 |
| பாகற்காய் | 70 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 70 |
| கரணைக் கிழங்கு | 30 | -- |
| பயிற்றங்காய் | 70 | 100 |
| லீக்ஸ் | 110 | 130 |
| போஞ்சி | 30 | 60 |
| கீரை - 1 பிடி | 25 | 15 |
| தேசிக்காய் | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 35 |




யாழ்.மத்திய கல்லூரி, சுவிஸ் பழைய மாணவர் மன்றத்தின் அனுசரணையுடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு நடத்திய பரிசளிப்பு நிகழ்வில் கல்லூரி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

## தேவாரப் பண்ணிசைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சனி, ஞாயிறு கிழமைகளில் பிற்பகல் 3 மணிமுதல் 4.30 மணிவரை இலவச தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடாத்தி வருகின்றது.

தேவார இசைமணி கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனால் நடாத்தப்பட்டு வரும் இப் பயிற்சி வகுப்புகளில் மாணவர்களை பங்குபற்றி பயன்பெறுமாறு மன்றத்தினர் அழைக்கின்றனர். (ஓ)




## கந்தபுராண படனம்

(மருதங்கேணி)

தென்புலோலி சின்னத்தாய் பிள்ளையார் கோவில் வருடாந்த கந்தபுராண படனம் கடந்த 6 ஆம்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 49 நாட்கள் நடைபெற்று மார்ச் மாதம் 27 ஆம் திகதி வள்ளியம்மன் திருமண படலம் இடம் பெறும்.

29 ஆம் திகதி வைரவர் மடையுடன் கந்த புராணப் படிப்பு நிறைவுபெறும். (ஓ-35)

### "கிராமங்களுக்கிடையே ஓட்டப்போட்டி"

# யாழ்.மாவட்டத்திலிருந்து 7பேர் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வவுனியாவில் நடத்தப்பட்ட மாகாணமட்டத்திலான " கிராமங்களுக்கு இடையே ஓட்டப் போட்டி"யில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 7வீரர்கள் வெற்றிபெற்று தேசிய மட்டப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாண மட்டத்திலான போட்டிகள் வவுனியாவில் நடைபெற்றன.

போட்டியில் முதல் மூன்றிடங்களையும் மற்றும் 6ஆம், 7ஆம்,8ஆம்,10 ஆம்இடங்களையும் யாழ்.மாவட்ட வீரர்கள் பெற்றுக் கொண்டனர். பெண்களுக்கான ஓட்டப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

முதலாம் இடம்:- ஆர்.அனுசியா-சாவகச்சேரி பிரதேச செயலகம்.

இரண்டாம்இடம்:- என்.மேசி-சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.

மூன்றாம் இடம்:-என்.சுமதி-சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.

10 ஆவது இடத்தை கோப்பாய் பிரதேச செயலக பிரிவைச்சேர்ந்த கே.நிரோஜினி பெற்றுக்கொண்டார்.

ஆண்களுக்கான போட்டியில் 6ஆவது இடம்:- எஸ்.ரஜீகரன்- வடமராட்சி கிழக்கு மருதங் கேணி பிரதேச செயலகம்.

7ஆவது இடம்:- எஸ்.நந்தகுமாரன்-பருத்தித்துறை பிரதேச செயலகம்.

8ஆவது இடம்:-எஸ்.திருவாகரன்-கோப்பாய் பிரதேச செயலகம்.

மாவட்ட ரீதியில் வெற்றிபெற்றவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.வடக்கு மாகாண மட்டத்தில் வவுனியாவில் நடைபெற்ற போட்டிகளில் யாழ்ப்பாணம், மன்னார்,வவுனியா மாவட்டங்களில் இருந்துதெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

மாகாணமட்டத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர்இந்த வருடம் யாழ். மாவட்டம் கலந்துகொண்டு கூடுதலான வெற்றிகளைப்பெற்றுக்கொண்டது. (ஓ-5)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ரி.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய ஆரம்பபிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்தந்தை R.X. நேசராஜா அடிகளார், கௌரவ விருந்தினராக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி முன்னை நாள் தலைவர் கி.கிறிதோப்பர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

(அல்வாய்)

யாழ். தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் வ.கணேச மூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பகுதித் தலைவர் திருமதி. கற்புக்கரசி சூடாமணி கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-2-19)

(அல்வாய்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் என். தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல் பிரிவின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ஸ்ரீ சற்குணராஜா கலந்து கொள்வதுடன் பரிசில்களை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சிவராணி ஸ்ரீ சற்குணராஜா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதிகள் க.சிறிதரன், க.இராஜரட்ணம்,வட இலங்கை சர்வோதயம் அறங்காவலர் செல்வி பொ. ஜமுனாதேவி, கௌரவ விருந்தினராக யாழ். கச்சேரி சமூக சேவைகள் சமூக நலத் துறை அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் க..தேவேந் திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக பங்கீட்டு அட்டை மீளாய்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இம் மீளாய்வுகள் கடந்த 6ஆம்திகதி நடைபெறவிருந்து பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-29)



மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தால் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு வீதிஒழுங்குமுறைகள்தொடர்பான களப்பயிற்சியும் செயலமர்வும் நடத்தப்பட்டது.

அதில் கலந்துகொண்ட மாணவர்களையும் லயன்ஸ் கழகத்தினரையும் படத்தில் காணலாம்.

## தற்காலிக வகுப்பறைகள் அமைக்கத் தீர்மானம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் அ.த.க.பாடசாலையில் தற்காலிக வகுப்பறைகள் தென்மராட்சி வலயக் கல்விப் பகுதியினரால் அமைக்கப்படவுள்ளது.

இங்கு தற்போது நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்ட இடநெருக்கடியை கருத்தில் கொண்டே மேற்படி தற்காலிக வகுப்புகள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-29)

## கைதடி மேற்கு கி.அ.பிரிவு நிலைத்து நிற்கும் வாழ்வாதார செயல் திட்டத்திற்கு தெரிவு

(சாவகச்சேரி)

மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட உள்ள நிலைத்து நிற்கும் வாழ்வாதார செயற்றிட்டத்திற்கு தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கைதடி மேற்கு கிராம அலுவலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவினரால் அப் பகுதி குடும்பங்களின் விபரங்கள் கிராமத்தின் தேவைகள் கணிப்பிடும் படிவங்கள் மூலம் திரட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## தையல் பயிற்சி பெற்றவர்களின் தயாரிப்புகள் கண்காட்சி

தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் கிராம அபிவிருத்தி நிலையத்தினரால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்து பயிற்சிபெற்ற யுவதிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சி எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.இக் கண்காட்சி, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் செல்வி எஸ். லோஜிதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் தா.தியாகமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-29)

## கோழிக்குஞ்சு விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தினரால் மாதாந்தம் அச்சுவேலி கோழிப் பண்ணையிலிருந்து கோழிக் குஞ்சுகள் பெறப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது.

ஒருநாள், ஒருமாதம், இரண்டு மாதம் நிரம்பிய குஞ்சுகளுடன் 5 வாரம் நிரம்பிய காடைக் குஞ்சுகளுமே விநியோகிக்கப்படவுள்ளது எனவும் தேவைப்படும் மக்கள் சாவகச்சேரி கால்நட வைத்தியர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-29)

## மயான சேவைக்கு கட்டணம் செலுத்தல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து மயானத்தில் எரிக்கப்படும் சடலங்களுக்கு அறவிடப்படும் கட்டணத் தொகையினை நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)





உலகளாவிய நிதி நெருக்கடி சம்பந்தமாக வங்கியாளர் சங்கத்தின் அனுசரணையுடன் ஈரோவில் மகாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் நடராஜசுந்தரம் கருத்துரை வழங்குவதையும்,

இளைப்பாறிய இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் க.உலகநாதன் உரை யாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 68

பேராசிரியர்
கா. இந்திரபாலா

### இள மக்களும் தமிழ் மக்களும்

ஆனாலும், அரசின் மரபைப் பேணிப் பௌத்த சங்கத்துக்குத் தன் ஆதரவை வழங்கினான். இதனை மஹாவங்ஸ ஆசிரியர் மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் (சாரித்தம் அனுபாலயம் + வழமையைப் போற்றி ). மூன்றாவதாக, எல்லாள மன்னன் துட்டகாமணி என்ற தெற்கு இலங்கை அரசனால் தோற்கடிக்கப்பட்டான் என்பது.

இறுதியாக, எல்லாள மன்னனின் மரணக் கிரியைகளின் பின் அவன் உடல் எரிக்கப்பட்ட இடத்தில் ஒரு சைத்தியம் (வழிபாட்டுத் தலம்) கட்டப்பட்டு, அது மிக அண்மைக் காலம் வரை சிங்கள மக்களால் வழிபடப்பட்டது என்பது.

இவற்றை விரித்துக் கூறுவதாயின், எல்லாளன் அநுராதபுரத்தில் எதிர்ப்பு எதுவும் இன்றி நீண்டகாலம் ஆட்சி நடத்தி இறுதியில் தெற்கிலிருந்து தன் ஆதிக்கத்தைப் பரப்பி வடக்கு நோக்கி வந்த காமணீ என்ற அரசனால் தோற்கடிக்கப்பட்டான்.

எல்லாளன் ஆட்சிக் காலம் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் குறுநில மன்னர்கள் ஒருவரை ஒருவர் தாக்கித் தம் வலுவையும் ஆள் புலத்தையும் பெருக்க முயன்ற காலமாகும். இதற்கமைய, தெற்கு இலங்கையில், மஹாகாம என்ற இடத்தில் தோன்றி குறுநில அரசு படிப்படியாகத் தன் ஆதிக்கத்தைப் பரப்பி பல குறுநில அரசுகளை வெற்றிகொண்டு அனுராதபுரத்தை நோக்கிப் படர்ந்தது. இந்த அரசின் மன்னனாகிய காமணீ அபய என்பான் குறுநிலத் தலைவர்களைத் தோற்கடித்து, இறுதியில் அனுராதபுரத்தையும் கைப்பற்றினான்.

இந்த வரலாறு பிற்பட்ட நூற்றாண்டுகளில் பெரிதும் போற்றப்பட்டு ஒரு காவியமாக்கப்பட்டது. அக் காவியம் மஹாவங்ஸ நூலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இக் காவியத்தில் காணப்படும் பல விபரங்கள் வரலாற்று உண்மைகளாக ஏற்றுக் கொள்ள முடியாதவை.

எல்லாளனுக்கும் காமணீ அபய (துட்ட காமணி எனப் பொதுவாகப் பெயர் பெறுபவன்) மன்னனுக்கும் இடையில் பெரும் போர் நடந்தது. அப் போரில் எல்லாளன் உயிரிழக்க காமணீ அபய அனுராதபுரத்தில் மன்னனானான் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், பொதுவாகப் பலரும் நம்புவது போல், எல்லாளனைத் தமிழ்ப் பகைவன் என்பதற்காகவோ பௌத்தனல்லாதவன் என்பதற்காகவோ காமணீ அபய எதிர்த்துப் போராடவில்லை.அரசியல் நோக்குடனேயே ஆதிக்கம் பெறுவதற்காக காமணீ இப் போரை நடத்தினான்.

எல்லாளனுடைய குடிகள் தம் மன்னன் மீது கொண்டிருந்த மதிப்பை காமணீ அபய மன்னனும் கொண்டிருந்தான் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எல்லாளன் இறந்த போது,காமணீ எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் இதனை உறுதிப்படுத்தும். மஹாவங்ஸ நூலின்படி, காமணீ மன்னன் எல்லாளன் ஈமக்கிரியைகளை நடத்துவதற்கு நகரத்தில் பறை சாற்றுவித்து, ஒரு யோஜனை தூரத்தில் வாழ்ந்த மக்களை வருவித்து எல்லாளன் வீழ்ந்த இடத்தில் உடலைத் தகனம் செய்து,அவ்விடத்தில் ஒரு சைத்தியம் எழுப்பி, அதனை மக்கள் வழிபட வேண்டும் எனப் பணித்தான்.

இலங்கை வரலாற்றிலேயே இதற்கு ஒப்பான செயல் ஒன்றும் இல்லை. இத்தகைய செயலை ஆற்றிய மன்னனை எவ்வாறு எல்லாளனைத் தமிழ் மன்னன் என்பதற்காகவும், பௌத்தனல்லாதவன் என்பதற்காகவும் போராடிச் கொன்றான் என்று கூறுவது?

எல்லாளனுக்கு எழுப்பிய சைத்தியமும், பின்னர் அதன் அருகே கட்டப்பட்ட எல்லாளன் படிமத்தைக் கொ்ணட கட்டடமும் அனுராதபுரம் அழியும் வரை நிலைத்திருந்தன. மஹாவங்ஸ நூலாசிரியர் வாழ்ந்த காலத்தில்.அதாவது எல்லாளன் இறந்து ஏறத்தாழ ஏழு நூற்றாண்டுகளின் பின், எல்லாளன் சைத்தியம் வழிபடப்பட்டு வருவதாக நூலாசிரியர் கூறுகின்றார்.

இதற்குப் பின்னர் எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டளவில் எழுதப்பட் மஹாவங்ஸத்தின் உரைநூல் எனப்படும் வங்ஜத்தகப் காஸினி என்ற பாளி நூலின் ஆசிரியரும் தன் காலத்தில் இருந்த எளார -படிமாகர என்னும் எல்லாளப் படிமம் இருந்த கோயிலைக் குறிப்பிடப்படுகின்றார்.

அத்துடன், அவர் காலத்திலும் எல்லாளன் சைத்தியம் 'வழிபடப்படுவதையும் கூறுகின்றார். இதற்குப் பின் பதினான்காம் நூற்றாண்டளவில் எழுதப் பெற்ற சிங்கள நூலாகிய ஸத்தர்மாலங்காரய என்ற நூலில் இவ் வழிபாடு நூலாசிரியர் காலத்திலும் தொட ர்ந்து நடைபெறுவதாகக் கூறப்பட்டுள்ளது. உண்மையில் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை கூட எல்லாளன் சைத்தியம் எனக் கரு தப்பட்ட கட்டடம் எளல ஸொஹொன (எல்லாளன் சமாதி) எனச் சிங்கள மக்களால் பெயரிடப்பட்டு மதிக்கப்பட்டு வந்தது.

### எல்லாளனுக்குப் பின்

காமணீ அபய மன்னனுடைய படைகள் அனுராதபுரத்தை நோக்கி வந்தபோது, எல்லாளன் தனது உறவினனாகிய பல்லுக என்பானிடம் படையுதவி கேட்டிருந்தான் என்றும் பல்லுக படையுடன் வந்தபோது எல்லாளன் உயிருடன் இருக்கவில்லை என்றும், பல்லுகனை காமணீ வெற்றிகொண்டு தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினான் என்றும் மஹாவங்ஸ மேலும் கூறும்.

காமணீ இவ்வாறு வலிமை வாய்ந்த ஓர் அரசனாக அனுராதபுரத்து அரசை அமைத்திருந்தாலும், முழு இலங்கையையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தவில்லை. அனுராதபுர அரசு மிகப் பெரிய அரசாக மாறியது. ஆனால் உறுதியான ஆட்சி அமைப்போ ஆளுங் குலமோ காமணீயின் வெற்றியின் விளைவாக உருவாகவில்லை. காமணீ அபய இறந்து சில ஆண்டுகளுள் அவன் குடும்பத்தவர் அனுராதபுரத்தில் தம் ஆதிக்கத்தை இழந்தனர்.

காமணீ அபய மன்னனின் ஆட்சிக் காலத்தில் சிங்கள இனக்குழு எழுச்சி பெற்றுக் காணப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

எனினும், அனுராதபுர அரசிலும் அங்கு ஆட்சி நடத்தியோரைப் பொறுத்தும் பல இனக்குழுக்கள் தொடர்ந்து இருந்தமையைக் காணலாம். காமணீ அபய மன்னன் வெற்றி பெற்றபின் சிங்கள இனக்குழுவினரே ஆட்சி நடத்தினர் என்று கூறமுடியாது. அடுத்து வரும் மூன்று நான்கு நூற்றாண்டுக் காலத்தில் பல தமிழ் மன்னர்களும் நாக என்ற பெயரைத் தாங்கிய (நாக) மன்னர்களும் அனுராதபுரத்தில் ஆட்சி நடத்தினர்.

காமணீ அபய இறந்த பின் அவன் சகோதரன் பதவியேற்றான். அவனுக்குப் பின் அனுராதபுரத்தில் அரசியல் உறுதியின்மை காணப்பட்டது. ஏறத்தாழ இருபது ஆண்டுகள் நான்கு மன்னர்களுடைய ஆட்சி நடைபெற்ற பின் மீண்டும் தமிழ் மன்னர்களுடைய ஆட்சி நடந்தது.

நவீன வரலாற்றாசிரியர் சிலர் கூறுவது போன்று துட்டகாமணி இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய வலிமை வாய்ந்த ஓர் இலங்கை அரசை உருவாக்கியிருந்தான் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று என்பதற்கு இந்த உறுதியின்மை சான்றாகும். (தொடரும்)

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் (1902-1915)

## கல்லடி வேலனும் 7

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

இவ்வாறு அமைந்திருக்கக் கூடிய விடயங்களை மையமாகக் கொண்டே எந்தவொரு பத்திரிகையும் வெளிவரும். இவற்றை அறிந்துகொள்வதும், விளங்கிக்கொள்வதும், சாத்தியமாகும் பட்சத்திலேயே, அப் பத்திரிகையின் தகவல்கள் கருத்துக்கள் ஆகியவற்றை வரலாற்றிற்கு பயன்படுத்திக் கொள்ளவும், பத்திரிகையை மதிப்பீடு செய்யவும் இயலும்.

இந்த வகையில் இப்போதைய உரையானது, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து வெளிவந்த மேற்படி பத்திரிகையைக் கவனத்தில் எடுக்கும்போது, இப் பிரதேசத்தில் ஆதிக்கம் செய்த பிரித்தானிய காலனித்துவத்தின் மேலாண்மைக்குட்பட்டே இப் பத்திரிகை பிரசுரமாகியது என்பதை அறிவோம்.

இதனால் பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்திற்கு விரோதமான விடயங்களை இப் பத்திரிகை தாங்கியதாக வந்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

பத்திரிகைச் சாதனங் களை உடைமையாகக் கொண்டவராக பத்தி ராதிபர் இருந்த காரணத்தினால், அச்சக உரி மையாளரால் ஏற்படக் கூடிய தாக்கம் இவருக்கும் சுதேச நாட்டியம் பத்திரிகைக்கும் இருப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் பத்திராதிபரே குற்றம் காணப்பட்டு சிறை பெற் றவராக இருந்த காரணத்தினால், 1910 ஆம் ஆண்டின் பின்னர், கல்லடி வேலன் சுதேச நாட்டிய க.நல்லதம்பி என்பவரே தொடர்ந்து பத்திராதிபராகவும் இருந்தார்.

இதனால், 1910 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெற்றிருந்த தனி யாண்மையைத் தொடரும் நிலை, பின்னர் குறைவடைந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. அதுமட்டுமன்றி கால ஓட்டங்களுக்கு ஏற்ப இடம்பெறும் மாற்றங்களும் பத்திரிகையின் வடிவமைப்பிலும், போக்கிலும் எண்ணம் சிந்தனைகளிலும் மாற்றங்கள் இடமளிப் பதற்கு வழிசெய்திருக்கும்.

சுதேச நாட்டியம் பத்திரிகையின் நிதி வளத்தினைப் பார்க்கும்போது, அதன் ஆசிரியர் தாமே சொந்தமாக அச்சகம் வைத்திருக்கும் நோக்குடன் பலர் வழங்கிய உதவியால் அச்சியந்திரம் ஒன்றை இந்தியாவில் இருந்து வாங்கி வந்திருந்தார்.

"எமது சுயபொறுப்பிலோர் அச்சியந்திரம் நாம் வைத்திருக்க வேண்டுமென்றும், அதில் எமததிகாரத்துள் ஓர் புதினப்பத்திரம் நடைபெறவேண்டுமென்றும், நெடுநாளாய் நம் முட் குடிப்புகுந்திருந்த பேரவாவை அனுகூலப்படுத்த முயன்று, நாம் இலங்கையில் பற்பல பிரதான இடங்களிலும் இருக்கும் எமது நண்பராயுள்ள கனவான்களைப் போய்ச் சந்தித்தபோது, அவர்கள் மிக் கமரியாதையோடும் அன்போடும் அனுசரித்து உபசரித்து ஏற்ற உதவி செய்து எம்மனதைத் தளர்வுறாது உற்சாகப்படுத்தி விட்டனர்.

அவர்களின் நன்றியை விளக்கவும், அவர்களை நம் சிந்தை மறக்காமையைக் குறிக்கவும், அப் பிரபுக்களின் நாமதேயங்களையும் உபகரித்த தொகையையும், பின்வரும் பத்திரிகைகளின் கீழ்க்காட்டுவோம். எமதெண்ணத்தைக் கடைத்தேறுமாறு செய்து எமது நண்பர்க்கு எம் சீவியமாக முழுதும் மிக்க பயபக்தி யும் கடமையும் பூண்டதாயிருக்கும்."

இவ்வாறு அமைந்து காணப்படும் பத்திரிகைத் தகவல் பத்திராதிபரின் தனியான தன்மையைத் தெரிவிக்கும் வேளையிலேயே அவருக்கு உதவியாக உயர் வகுப்பினர் எனக் கருதக்கூடிய ஒரு பிரிவினரின் ஆதரவு இருந்ததையும் காட்டுவதாக உள்ளது. அதே பத்திரிகையில் தொடர்ந்து இடம்பெறும் பகுதி, அக்காலத்தில் இவருக்கு உதவியிருக்கக் கூடிய அல்லது, இவருக்கு நெருங்கிய நண்பர் களாக இருந்திருக்கக் கூடியவர்களில் சிலரின் பெயர்களை வெளிப்படுத்துவதாக உள்ளது.

"...உபகரித்த பணத்தைக் கொண்டே யாம் சென்னைப் பட்டணஞ் சென்று ஓர் அச்சியந்திரத்தையும் அதற்காம் சமஸ் தளபாடங்களையும் கொண்டு வந்து நம் அச்சியந்திர சாலையில் சேர்த்துவிட்டு சென்ற ஆனி மாத முதல் சனிக்கிழமை சுபமுகூர்த்தத்திலே முதல் முத்திரீ கரணவேலையை ஆரம்பித்தோம். அன்று வலிகாமம் வடக்கு எமணியகாரன் குமாரகுலசிங்கம், அப்புக்காத்து ஸ்ரீ ஐசக் தம்பையா, யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ கென்சுமன், ஸ்ரீபரமசாமி, சுன்னாகம் பகுதிப்பராபத்தியக்காரன் ஸ்ரீ செல்லப்பா, பிறக்றர் ஸ்ரீ சி.பொன்னம்பலபிள்ளை, திருநாவுக்கரசு, வலிகாமம் மேற்கு மணியகாரன் ஸ்ரீ தில்லைநாதபிள்ளை முதலிய அனேக உத்தியோகத்தர்களும், பல இடங்களிலுமிருந்து இன்னும் அனேக சாமான்ய பிரபுக்களும் வந்து கூடினார்கள்.

சுதுமலை ஸ்ரீ முத்துக்குமாரபிள்ளை வைத்தியர் தற்காலம் யாழ்ப்பாணத்தில் வாத்தியத்தாற் பிரபல கீர்த்தி பெற்று விளங்கும் சொக்கலிங்கம், வயிரு எனப் பெரிய வாத்தியக்காரரையும், அவர் குழுவினரையும் அவர்கள் வாத்தியக் கருவி களோடு அழைத்து வந்து சபையைத் தமது சபையாக மதித்துக் கொண்டாடினர்...

அது பொச்சாப்பினாலும், சாவகாசமின்மையாலும் வராதுவிட்ட சில உத்தியோகஸ்தரும், பிரபுக்களுள் மறுநாள் வந்து, நம்மைச் சங்கித்துச் சந்தித்ததோடு பத்திரிகையையும், அச்சியந்திரத்தையும் நடப்பிக்கும் வழிகளைக் குறித்தும் எமக்குப் பெரும் புத்திமதியும் புகட்டினார்கள்' (சு.நா.15.09.1902)

இவ்வாறு கிடைத்துள்ள அத் தகவல் க.வே.சாதாரண யாழ்ப்பாணத்தவர் என இருந்தாலும் அக்காலத்தில் வாழ்ந்த உயர் வகுப்பாரின் ஒரு பகுதியாருடன், நெருக்கமான தொடர்பு கொண்டவர் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

அதுமட்டுமன்றி உயர் வகுப்பினரில் மற்றுமொரு பாலார் சம்பிர தாய அளவிலான தொடர்புகளைக் கொண்ட வர்களாகவும் இருந்துள்ளனர் என்பதையும் புரிந்து கொள்ளமுடிகிறது.


இவ்வேளையில் அவர் அக்காலத்தில் இந்தியாவில் வெளிவரும் பத்திரிகைகள் பற்றிய நுட்பங்களையும் அறிந்து வந்திருப்பதற்கும் இடமுண்டு. அச்சக உடைமையாளர் என்ற வகையில், நூல்கள், பிறபதிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டமையால் பத்திரிகை வெளி யிடுதல் என்பது ,பகுதி நேரக் காரியமாகவே அமைந்துள்ளதென்பதும், அறியப்படும். இதனால் பத்திராதிபர் குறிப்பிடத்தக்க அளவுக்கு தாம் விரும்பிய வகையில், பத்திர கையை வெளியிடக் கூடியதாக இருந்திருக்க முடியும்.

இந்த நிலையில் பத்திரிகையின் பிரசுரிப்பு, தொடர்ச்சி அல்லது நீட்டம் ஆகியவை பத்திராதிபருக்கும் வாசகர்களுக்கும் இடையிலான தொடர்பு, ஊடாட்டம் ஆகியவற்றை மையப்படுத்தியதாகவும், இருசாராருக்கும் இடையில் காணப்படும் நெருக்கத்திலுமே தங்கியிருப்பதாக இருந்தது.

இங்கு வாசகர்களின் எதிர்பார்ப்புக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் பத்திரிகை நடத்தப்பட்டுள்ளது என்ற எண்ணம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. (தொடரும்)

# பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க ரூ 41 இலட்சம் கோடியில் புதிய திட்டம்

## 40 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்கிறார் ஒபாமா



(வோஷிங்டன்) வீழ்ந்து விட்ட அமெரிக்க பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த அமெரிக்க அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ரூ41 இலட்சம் கோடி நிதியுதவியின் மூலம் 40 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராகக் கடந்த ஜனவரி 20 ஆம் திகதி பொறுப்பேற்ற பராக் ஒபாமா, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் முறையாக வெள்ளை மாளிகையில் நிருபர்கள் கூட்டத்தில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

மிகவும் சோதனையான கட்டத்தில் நான் அதிபராக பொறுப்பேற்று இருக்கிறேன். நாட்டின் பொருளாதாரம் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

நிதி நெருக்கடி, அதைத்தொடர்ந்து பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.இதைச் சமாளிக்க ரூ 41 இலட்சம் கோடியில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தனியார் முயற்சியுடனான இந்தத் திட்டத்தின் மூலம் 40 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதில் எனது முதல் கட்டப் பணி புதிதாக 40 இலட்சம் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது அல்லது வேலைவாய்ப்புக்களை காப்பாற்றுவதுதான். வேலைக்குச் சென்றுவிட்டாலே மக்கள் மனதில் நம்பிக்கை துளிர்விடும். பொருட்களை வாங்குவார்கள் அல்லது முதலீடு செய்வார்கள் என்றார் ஒபாமா.

முன்னதாக ரூ 41 இலட்சம் கோடியிலான நிதியுதவித் திட்டத்துக்கு அமெரிக்க செனட் ஒப்புதல் அளித்தது. 61 பேர் இதற்கு ஆதரவாகவும் 36 பேர் இதற்கு எதிராகவும் வாக்களித்தனர்.

அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சரிவைத் தூக்கி நிறுத்துவது நமது கடமையாகும்.

எனவே அனைத்து உறுப்பினர்களும் கருத்து வேற்றுமைகளை மறந்து இந்தத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று ஒபாமா கேட்டுக் கொண்டார். (ஓ-6)

# திருப்பதி கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

### -பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததைத் தொடர்ந்து, அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. திருமலை - திருப்பதி தேவஸ்தான அலுவலகத்திற்கு, நேற்று முன்தினம் காலை பக்ஸ் மூலம் ஒரு கடிதம் வந்தது.

அதில் ''திருமலை பகுதியில் அன்னிய மத பிரசாரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு வருவதாக அறிகிறோம். இந்த நிலை நீடிக்குமானால், இன்று வியாழக்கிழமைக்குள் திருமலை - திருப்பதி தேவஸ்தானம் வெடிகுண்டுவைத்து தகர்க்கப்படும்'' என்று மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தின் நகலை, தேவஸ்தான செயல் அலுவலர் சித்தூர் மாவட்ட பொலிஸ் மேலதிகாரியிடம் காண்பித்து, உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். அதைத்தொடர்ந்து பொலிஸ் மேலதிகாரி உஷார் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஆயுதம் தாங்கிய பொலிஸார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் குவிக்கப்பட்டனர். துப்பறியும் மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டன.

கோவிலின் பல்வேறு பகுதிகளிலும் வெடிகுண்டு நிபுணர்கள் துருவித்துருவி சோதனை போட்டனர். துப்பறியும் நாய்கள் அனைத்துப் பகுதிகளிலும் மோப்பம் பிடித்தன. எனினும், வெடிகுண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. (ஓ-6)

## உலக தரிசனம்

# எகிப்தில் 2600 வருடங்களுக்கு முற்பட்ட 20 மம்மிகளை கொண்ட கல்லறை கண்டுபிடிப்பு



(கெய்ரோ)

எகிப்தில் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட 20 க்கு மேற்பட்ட மம்மிகளைக் கொண்ட பாரிய கல்லறை தொகுதியொன்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கெய்ரோவின் தெற்கேயுள்ள சகாலா பிரதேசத்திலேயே இந்த மம்மிகளைக் கண்டுபிடித்துள்ளதாக மேற்படி அகழ்வாராய்ச்சிக்கு தலைமை தாங்கிய ஸாஹி ஹவாஸ் தெரிவித்தார்.

மேலும் மேற்படி கல்லறைகளில் ஒன்று 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என கருதப்படுகிறது.

மேலும் அவற்றில் 22 மம்மிகள் கிறிஸ்துவுக்கு முன் 640 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஸாஹி தெரிவித்தார்.

கல்லறைகளின் சுவரில் காணப்பட்ட எழுத்து அடையாளங்கள் மூலமே அதன் காலத்தை கணிப்பிட்டதாக அவர் கூறினார்.

அத்துடன் மேற்படி கல்லறைத் தளத்தில் 8 மர மற்றும் கல்லாலான சவப்பெட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் ஒரு சவப்பெட்டி பண்டைய காலம் முதற்கொண்டு ஒரு போதும் திறக்கப்படாமல் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பண்டைய எகிப்தில் 70 சதவீதமான சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுவதாக ஹவாஸ் கூறினார். (ஓ-6)

# அணு விஞ்ஞானி அப்துல் காதிர்கான் மீது புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான அணுவிஞ்ஞானி அப்துல் காதிர்கான், வீட்டுக் காவலில் இருந்து சமீபத்தில் நீதிமன்றம் மூலம் விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் கவலைதெரிவித்தன.

இதைத் தொடர்ந்து அவருக்கு மீண்டும் புதிய கட்டுப்பாடுகளை அந்த நாட்டு அரசாங்கம் விதித்துள்ளது. அவர் வெளியாட்கள் யாரையும் சந்திக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அவர் இஸ்லாமாபாத் நகரை விட்டு வெளியேறினால் 48 மணிநேரத்துக்கு முன்பாக அரசாங்கத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

நீதிமன்றம் அவரை விடுவித்ததைத் தொடர்ந்து கடந்த சில நாட்களில் சிலர் அவரை சந்தித்துப் பேசினார்கள் என்றும் கடந்த திங்கட்கிழமை யாரும் அவரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர் வெளிநாட்டுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டது.

அவர்குடும்பத்தினர், உறவினர் நண்பர்களை மட்டும் சந்திக்க அனுமதிக்கப்படிருக்கிறார். பணம் கொடுக்கவோ வாங்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, அவர் நடமாட்டத்துக்கு இன்னும் தடை நீடிக்கிறது என்று அமெரிக்காவுக்கு உறுதிமொழி கொடுத்திருக்கிறார். (ஓ-6)

# சீனாவில் தீப்பிழம்பாக எரிந்த 40 மாடி ஆடம்பர ஹோட்டல்


(பீஜிங்)

சீனாவின் பீஜிங் நகரில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்படாத நிலையிலிருந்த 40 மாடி ஆடம்பர ஹோட்டல் ஒன்று திங்கட்கிழமை இரவு தீப்பற்றி எரிந்ததில், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சீனப் புதுவருட கொண்டாட்டத்தின் இறுதி நாளையொட்டி வாணவேடிக்கைகள் நடைபெற்ற வேளையிலேயே, மன்டாரின் ஓரியண்டல் என்ற மேற்படி ஹோட்டலில் இந்தத் தீ விபத்து அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

ஹோட்டலின் மேல் மாடியொன்றில் ஏற்பட்ட இத்தீயானது மிக வேகமாகப் பரவியதில் முழு ஹோட்டலும் தீப்பிழமபாக காட்சியளித்தது. இந்நிலையில் ஹோட்டலைச் சுற்றி 200 மீற்றர் தொலைவுவரை வாழும் மக்களை வீடுகளை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டது.

எனினும் தீயணைப்புப் படை வீரர்கள் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததால், தீ அருகிலிருந்த ஏனைய கட்டடங்களுக்குப் பரவாமல் தடுக்கப்பட்டது.



500 அடி உயரமான இந்த ஹோட்டலில் 241 அறைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# ஆப்கான் பயங்கரவாதிகளால் உலகம் முழுவதற்கும் ஆபத்து

### அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் நிலவும் பயங்கரவாதம் அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதற்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாகும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை அமெரிக்கா நடத்தி வருகிறது. ஆப்கானில் செயல்படும் பயங்கரவாதிகள் அமெரிக்காவுக்கு மட்டும் எதிரி அல்ல, உலகம் முழுவதற்கும் அவர்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் எல். ஜோன்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானின் எல்லையை ஒட்டிய பகுதிகளிலும் சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான போரை அமெரிக்கா நடத்தி வருகிறது. இதில் அமெரிக்காவுடன் நேட்டோ நாடுகள் பலவும் இணைந்து செயல்படுகின்றன.

பயங்கரவாதம் மட்டுமின்றி போதை மருந்துகளை உற்பத்தி செய்வது, கடத்துவது ஆகியவற்றிலும் பயங்கரவாதிகள் ஈடுபட்டுள்ளனர். அதற்கு ஆப்கானிஸ்தானை பிரதான களமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

பயங்கரவாதம், போதை மருந்து ஒழிப்பு ஆகியவற்றை முற்றிலும் அழிக்க நேட்டோ நாடுகள் மட்டுமின்றி, ஆப்கான் மற்றும் பாகிஸ்தானுடனும் இணைந்து அமெரிக்கா செயல்பட்டு வருகிறது. அதற்கேற்ற வகையில் புதிய திட்டங்களை வகுத்து சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது என்றார். (ஓ-6)

# வாகனப் பரிசோதனைக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மோட்டார் போக்கு வரத்து திணைக்களத்தினால் பதிவுத் தபால் மூலம் உடமை மாற்றம் தொடர்பான வாகன பரிசோதனைக் கடிதங்கள் வாகன உடமையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் தபாலில் விநியோகம் செய்யப்படாத இக்கடிதங்கள் இத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் நேரில் வந்து வாகன பரிசோதனைக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ் மாவட்ட உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

**உரிமையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டு உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் திரும்பிய வாகன உடமை மாற்றம் தொடர்பான கடிதங்கள் வருமாறு.**

NPGG-4256 ஏ.குணதீபன் (கைதடி தெற்கு), NPMC-6707 எஸ்.சந்திரராஜா (கொக்குவில் கிழக்கு), 500-4850 எஸ்.முத்து நவரதன் (146 கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்) ,NPGL-9055 ஐ.சீவநேசன் (355, கண்டி வீதி அரியாலை ).

500-8805 எஸ்.நகுலேஸ்வரன் (தாவடி வடக்கு) , NPHV-9208 கே.செல்லப்பா (கொக்குவில் தெற்கு ), 500- 3421 வி.இராஜ சூரியர் (கொக்குவில்மேற்கு ),1-2370 எஸ்.பொன்னுத்துரை (கோப்பாய் வடக்கு) , 21-3594 பி.தவரேந்திரன் (கோப்பாய்மத்தி) , NPHJ-3854 எச்.விஜயசேகரன்( ஏழாலை தெற்கு ), 136- 1501 டி.கிருஸ்ண நாதன் (உடுவில் தெற்கு), 4-3864 கே.கே.சங்கவத்தி கந்தரோடைசுன்னாகம் ).

30-3573 ஆர்.சிவலிங்கம் (சுன்னாகம்) 500-9900-(டச்சு வீதி, பெரியவிளான், இளவாலை). NPHQ -9940பி. ஜெயராசா - (2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை), NPGS 3979 எஸ். நாகன் - (கைதடி வடக்கு, கைதடி), 153-9000 கே. ரவீந்திரன - (கான வாத்தியபுலம், கோப்பாய் மத்தி), NPME - 0263 வி. முகுந்தன் - (உரும்பிராய் மேற்கு), NPJM - 6027எ.ஹிட்லர் தங்கராஜா - (4, 2ம், குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்).

NPJJ-0609 கே.மனோகரன் - (228 புகையிரத வீதி, கந்தர்மடம்), NPJL -8190 எ. றொபின் டரிஸ்ரன் -( 58, புதிய வீடு திட்டம் குருநகர்), NPHJ-4227 ஜே. டில்சன் - (677/19, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்), NPGZ- 6826 கே. சத்தியகுமார் - (310 பருத்தித் துறை வீதி, நல்லூர்), NPMW- 4043 என். ஐ.எச். குருக்கள் - (இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு), 8-9224 கே. சுப்பிரமணியம் (நெல்லியடி, கரவெட்டி), NPJU -1689பி. பிரசாந் - (கண்டி வீதி, சாவகச்சேரி), NPGP-4326 கே. ஜெயக்குமார் - (அள வெட்டி தெற்கு), 149-20151வி. மகேந்திரகுமார் - (3 கச்சேரி கிழக்கு லேன், சுண்டுக்குளி), NPJW-4669 எஸ். அமிர்தலிங்கம் - (குறுக்கு வீதி, நல்லூர்), NPTL - 8214 எஸ். சிவகுருநாதன் - (22 ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்), 500-4850 எஸ். முத்துநவரட்ணம் - (146, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), NPGY-8437 (வெள்ளம் போக்கடி, கொடிகாமம்), NPMF -0863 எஸ். பி. சிறிதரன் - (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), NPJD- 6225எஸ். தவகுலசிங்கம் - (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), 500-3498ரி. தேவகுமார் - (நெருஞ்சிமுனை, ஊர்காவற்றுறை), 5-3932 எஸ். ஐ.மகாதேவன் - (660, பருத்தித்துறை வீதி, நல்லூர்), NPGN - 9735எம்.என். செபஸ்ரியன் - (2ம் குறுக்குத்தெரு, பாசையூர்), NPMB- 8734 எஸ். சிவரஞ்சித் - (சந்தை வீதி, யாழ்ப்பாணம்).

206-1923 எஸ். சிறி புஸ்பநாதன் - (18, றக்காலேன், யாழ்ப்பா ணம்), NPHH - 9466 எஸ். சசிக்குமார் - (கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்), NPMG -8368 சி. பிராசத் (628/1 கே.கே.எஸ் .வீதி யாழ்ப்பாணம்), NPJU -1665 எம். பிரபா கரன் - (ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி), NPGZ - 0179 எஸ். கனகநாயகம் - (51 சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி ), NPJG - 6015 பி.மூர்த்தி (சோமசுந்தரம் வீதி, ஆணைக் கோட்டை) , 500-3245 ஏ . சிவசம்பு - (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

500-2932 வி. நாகலிங்கம் - (ஏழாலை தெற்கு சுன்னாகம்), NPJY- 3706 எஸ். செல்வச்சந்திரன்-(புலோலிதெற்கு, புலோலி), NPME - 7845 கே. சந்திரமோகன் - (மருதங்கேணி வீதி, புலோலி கிழக்கு பருத்தித்துறை).

NPJY- 5700ரி. ரஜிந்தன் - (கலைவாணி வீதி, சித்தங்கேணி), NPMT- 4472 ஆர். நாகேந்திர ராஜா (புலோலி மேற்கு, பருத்தித்துறை), 8- 5723 பி.பி. சந்திரி - (கொக்குவில், யாழப்பாணம்), NPMR- 4278 எஸ். ரதலிங்கம் - (65, அச்சுவேலி, நீர்வேலி), NPJL-5469 துஸ்யந்தன் - (கல்வளைறோட், சண்டிலிப் பாய்), NPGI-7706 ஆர்.யோகராஜா - (59 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்) (ச)

## மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம், இலங்கை வங்கியின் அனு சரணையுடன் மயிலட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி சுன்னாகம் தெற்கு ஒற்றுமை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு கண்ணகி ஏ விளையாட்டுக்கழகம் எதிர் ஈஸ்வரி விளையாட்டுக்கழகமும் நாளை பிற்பகல் 4 மணிக்கு ஐங்கரன் விளையாட்டுக்கழகம் எதிர் யுவசக்தி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(ஓ-6)

## மெய்ப்பாட்டியலும் மரபியலும் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அளவையூர் பண்டிதர் க. நாகலிங்கம் எழுதிய செந்தமிழ் இலக்கண விளக்கம் நான்காம் பாகம் ***மெய்பாட்டியலும் மரபியலும்*** நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து கொள்வார்.

நூல் வெளியீட்டுரையை கவிஞர் சே.பத்மநாதன்,ஆய்வுரையை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் இ.குமரன் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பொ. அருந்தாகரன் ஆகியோர் நிகழ்த்துவர் (ஓ-6)

# வடமராட்சி வலய மட்ட வலைப்பந்துப் போட்டிகள்

வடமராட்சி கல்வி வலயத்தின் வலய மட்ட வலைப்பந்துப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிகள் யாவும் வலயக் கல்வி அலுவலக 14/01 கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக நடத்தப்படும்.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் முழுப்பெயர் பிறந்த திகதி சேர்வு எண் பிறப்புப்பத்திர இலக்கம் அ.அ.இலக்கம் தரம் கையொப்பம் என்பன அதிபர் பொறுப்பாசிரியரினால் உறுதிசெய்யப்பட்டுபோட்டியின்போது இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் ஒவ்வொரு போட்டியின் போதும் மத்தியஸ்தர் கட்டணமாக ரூபா 150ஐ செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானதாகும் பங்குபற்றும் அணிகள் பந்து கொண்டு வருதல் வேண்டும் இப்போட்டிகளில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8/15 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் வடமராட்சி மத்திய கல்லூரி அம்பன் அ.மி.த.பாடசாலை மற்றும் 2ஆவது போட்டியில் ஞானசாரியார் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியன பங்கு பற்ற உள்ளன. அடுத்த 3ஆவது போட்டியில் தென்தோமஸ் கல்லூரியுடன் மெதடிஸ்த பெ.உ.பாடசாலையும்,

4ஆவது போட்டி யில் வட இந்து மகளிர் கல்லூரியும் உடுப்பிட்டி அ.மி.க.பாடசாலையும் பங்குபற்றவுள்ளன. போட்டியில் 2ஆவது போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் பங்கு பற்றவுள்ளனர். இதன் பின்னர் 4ஆவது போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலையும் 5ஆவது போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலையும் பங்கு பற்ற உள்ளன. மற்றும் 6ஆவது போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலையும் 3ஆவது போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலையும் பங்கு பற்றவுள்ளன.

இறுதியாக இவ்வருட போட்டிகளிலும் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. (ஓ-19)

# பிரதேசவாதத்திற்கு தீ மூட்டும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர்

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய, வடமேல் மாகாண சபைத்தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பிரசாரக்கூட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பங்கேற்ற ஆறு பிரதான கூட்டங்கள், பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற 16சிறுசிறு கூட்டங்கள் 2312 ஒலி பெருக்கி பிரசார நடவடிக்கைகளுமே நிறைவடைந்துள்ளன என்று அமைச்சர் டளஸ் அழகபெரும தெரிவித்தார்.

இரு மாகாண சபைகளிலுமுள்ள 40 தொகுதிகளில் 39 தொகுதிகளிலும் நூற்றுக்கு நூறு வீதம் எமது முன்னணி வெற்றியீட்ட விருக்கின்ற நிலையில் தோல்விக்கான சம்பிரதாயபூர்வமான பதிலைஐக்கிய தேசியக் கட்சி தயாரித்துக்கொண்டிருக்கின்றது.

இந் நிலையில் ரணில் விக்கிரமசிங்க பிரதேச வாதத்திற்கு தீ முட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரி வித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான, சிறு சிறு கூட்டங்கள் மற்றும் ஒலி பெருக்கியின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகளும், இரண்டு தடவைகள் வீட்டுக்கு வீடு சென்று மேற் கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகள் யாவும் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவ டைந்துள்ளன. இதன்போது மக்கள் அணி திரண்டு ஆதரவளித்தனர்.

எமக்கு கிடைத்த இரண்டாவது ஆய்வறிக்கையின்பிரகாரம் இரு மாகாண சபைத் தேர்தல்களிலும் 40 தேர்தல் தொகுதிகளில் 39 தொகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நூற்றுக்கு நூறு வீதம் அமோக வெற்றிபெறும், கண்டியில் ஒரு தேர்தல் தொகுதியில் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறு போட்டி நிலவுகின்றது.

ஜனாதிபதி தலைமையில் நடை பெறுகின்ற இறுதிப் பிரசாரக் கூட்டத்திற்கு பின்னர் அந்த தொகுதியின் வெற்றியும் எமது பக்கம் திரும்பிவிடும். தேர்தலின் போது கட்சியின் ஒழுக்கத்தை கடைப்பிடிக்குமாறு ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள், வேட்பாளர்களிடம் கேட்டுக் கொண்டுள்ள நிலையில் தோல்விக்கான சம்பிரதாயபூர்வமான பதிலை ஐக்கிய தேசியக்கட்சி தயாரித்து கொண்டிருக்கின்றது.

தேர்தல்களில் தொடர்தோல்விகளை தழுவிக்கொள்ளவிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க பிரதேசவாதத்திற்கு தீ மூட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றார். ரணில் விக்கிரமசிங்கவின் இந்த செயற்பாடுகளை அரசாங்கம் கண்டிருக்கிறது என்றார். (ஓ-6)




யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் வன்னி மக்களின் பாதுகாப்புக்காக பல்கலைக்கழக சிவன் ஆலய முன்பாக மௌன பிரார்த்தனையும் உபவாசமும் கடந்த திங்கட்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கால வரையறையற்ற போராட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்டவர்களைப் படங்களில் காணலாம்.

# வடக்கு மீட்கப்பட்டாலும் அங்கு தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியாது

## அதற்கான திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

கிழக்கு மீட்கப்பட்ட அடுத்த கணமே அங்கு ஜனநாயகம் பறிக்கப்பட்டு விட்டது. இந்த நிலைதான் வடக்கிற்கும் ஏற்படப்போகின்றது. வடக்கு மீட்கப்பட்டாலும் அங்கு தமிழ் மக்களை நிம்மதியாக வாழவைக்கும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை என்று ஜே.வி.பி அதிருப்தி தெரிவித்துள்ளது.

நாட்டின் சகல உற்பத்தித் துறைகளும் வங்குரோத்து நிலைக்குச் செல்ல காரணமான கூட்டமைப்பு அரசாங்கம் கிழக்கில் மீனவத் தொழிலை முடக்கி அந்த மக்களின் வயிற்றில் அடித்துக் கொண்டிருக்கின்றது என்று ஜே.வி.பி யின் மாத்தறை மாவட்ட எம்.பி. பிரேம சிறிமானகே தெரிவித்தார்.

கொழும்பு - நிப்போன் ஹோட்டலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு பிரேமசிறி மானகே மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டுவிட்டது. மீட்கப்பட்ட அந்த பிரதேசத்தில் பாரிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் நவோதய என்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அரசாங்கம் கூறுவது நம்பக்கூடிய விடயம் அல்ல அப்படி எதுவும் அங்கு இல்லை.

இங்கு மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் நம்பியிருக்கும் இலட்சக்கணக்கிலான மக்களும் தினம் தினம் செத்து மடிகின்றனர்.

பொருளாதாரம், தேசிய வருமானம் என்று பெரிதாக பேசுகின்ற அரசாங்கம் மீன் உற்பத்தியை முடக்கி அந்த மக்களின் வயிற்றில் அடித்திருப்பது அப்பட்டமான அடிப்படை உரிமை மீறல் செயற்பாடாகும்.

இந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு கூட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. பாராளுமன்றத்திலும் இதுகுறித்து விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பயன் இல்லை.

பொய்யை மட்டுமே பிரசாரமாக கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மக்களை ஏமாற்றி தமது பித்தலாட்டத்தை நெறிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதனை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கு மக்களின் அவலநிலைக்கு இன்றைய அரசாங்கமே காரணம். பயங்கரவாதத்திடமிருந்து கிழக்கு எப்போது மீட்கப்பட்டதோ, அடுத்த கணமே அங்கு ஜனநாயகம் பறிக்கப்ட்டு விட்டது.

இப்போது கிழக்கு மக்கள் ஜனநாயகம், உரி மைகள், வருமானங்கள் இழந்தவர்களாகவும் வாழ்வதற்கான வழி தெரியாமலும் இருக்கின்றனர்.

இதே நிலைதான் வடக்கிற்கும் ஏற்படப் போகின்றது. வடக்கு மீட்கப்பட வேண்டும் என்பதில் எம்மிடம் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், வடக்கு மீட்கப்பட்டதன் பின்னர் அங்கு தமிழ் மக்களை வாழவைப்பதற்கான திட்டம் எதுவும் அரசிடம் இருக்கின்றதா என்பதுதான் கேள்விக்குறியாகும்.

வடக்கு மக்களை நிம்மதியாக வாழவைக்கும் திட்டம் எதுவுமே அரசாங்கத்திடம் இல்லை. அப்படியிருக்கும் போது இன்று வடக்கை அரசியலாக்கி தேசிய அரசியலையும் வங்குரோத்து ஆக்கிவிட்டது மஹிந்த அரசு.

எனவே, வடக்கு மீட்கப்பட்ட பின்னர் அங்கு ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். அதேவேளை, கிழக்கில் இழக்கப்பட்டிருக்கின்ற ஜனநாயகமும் சகவாழ்வும் நிலை பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் கிழக்கு மீனவர்கள் தொடர்பில் கிழக்கு மாகாணசபை அக்கறையீனமாக நடந்து கொள்கின்றது. அரசாங்கமும் இதனையே கடைப்பிடித்து வருகின்றது. இந் நிலை தொடருமானால் அனைத்து மீனவர்களையும் இணைத்துக் கொண்ட பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுவதை அரசாங்கத்தால் தடுக்க முடியாது என்றார். (ஓ-6)

# ஈழத் தமிழர் படுகொலையை கண்டித்து நெதர்லாந்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஈழத்தமிழர்கள் மீது சிங்கள பேரினவாத அரசின் தமிழ் இனப் படுகொலைகளைக் கண்டித்தும் , இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை போர் குற்றங்களுக்காக கைது செய்து விசாரணை நடத்துமாறும் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி புதன் அன்று மதியம் ஒரு மணியில் இருந்து 3 மணி வரை நெதர்லாந்தில் கேக் நகரில் உள்ள சர்வதேச போர் குற்றவியல் நீதிமன்றின் முன்பாக மாபெரும் அவசர கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இதில் பெருந்திரளாக மக்களைக் கலந்துகொள்ளுமாறும் நெதர்லாந்தில் உள்ள தமிழ் அமைப்புகள் இதற்கு ஆதரவு வழங்குமாறும் இவ் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்த காணாமல் போதலிற்கு எதிரான அமைப்பான *இக்காட்* அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஓ-6)

# போரினால் இலங்கை 20 ஆயிரம் பில்.டொலர் பொருளாதார அழிவுகளை சந்தித்துள்ளது

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

கடந்த 25 வருடங்களாக 6 போர் நிறுத்தங்களுடன் இலங்கையில் நடைபெற்று வரும் போரினால் இலங்கை 20ஆயிரம் பில்லியன் டொலர் பொருளாதார அழிவுகளை சந்தித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

கடந்த 25 வருடங்களுக்கு 6 போர் நிறுத்தங்களுடன் நடைபெற்று வரும் போரினால் இலங்கை 20 ஆயிரம் பில்லியன் டொலர் பொருளாதார அழிவுகளைச் சந்தித்துள்ளது.

எனவே, தற்போது உலகில் ஏற்பட்டு வரும் பொருளாதார நெருக்கடிகளை தாங்கிக் கொள்ளும் சக்தி இலங்கைக்குக் கிடையாது.

இலங்கை அரசின் ஏற்றுமதித்துறையில் 60 விகிதம் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க சந்தைகளையே நம்பியுள்ளது.

உல்லாச பயணத்துறை பாரிய பாதிப்புக்களை சந்தித்துள்ளது. எதிர்வரும் மூன்று மாதங்களில் பல விடுதிகள் மூடப்படும் நிலை தோன்றலாம்.

ஆடை உற்பத்தி தொழிற்சாலைகளின் உயரதிகாரிகள் தற்போது பங்களாதேஷ் போன்ற நாடுகளை நாடி செல்கின்றனர். இதுவும் நீண்டகால போக்கில் பொருளாதாரத்தை பாதிக்கும்.

இலங்கையின் தேயிலை தொழில் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளது. இறப்பர் , கறுவா உற்பத்திகளும் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளதால் 4 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1983களில் 3 இலட்சத்து 38 ஆயிரம் உல்லாசப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். ஆனால், 2008ஆம் ஆண் டில் அதன் எண்ணிக்கை 4 இலட்சத்து 38 ஆயிரம் எனினும் கம்போடியாவை எடுத்தோமானால் 1983 ஆம் ஆண்டு 2 இலட்சம் உல்லாசப் பயணிகள் அங்கு சென்றிருந்தனர். தற்போது அதன் எண்ணிக்கை 20 இலட்சம் ஆகும்.எனவே இந்த இழப்புகளால் இலங்கைக்கு ஏற்பட்ட இழப்புக்கள் 6 ஆயிரம் பில்லியன் ரூபாய்களாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# 'தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை' என்ற அரசின் கூற்று கேலிக்கூத்தானது

## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கை தமிழ் மக்கள் மீது இந்திய மத்திய அரசாங்கம், தமிழக ஆட்சியாளர்கள் கொண்டுள்ள அக்கறை தொடர்பில் பூரண திருப்தியில்லையென்ற போதும் எம் மக்களுக்காக தமிழக மக்களின் உணர்வு பூர்வாமன போராட்டங்கள் உணர்ச்சிவசப்படச் செய்வதோடு தலைவணங்கச் சொல்கிறது.

எனவே இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாத ராஜ்ஜியத்தை உருவாக்க முயலும் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை உள்ளதாகத் தெரிவித்திருப்பது கேலிக்கூத்தாகும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறை பேச்சாளரும்,அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தமிழ் மக்கள் மீது அதிக அக்கறையை அரசாங்கம் கொண்டுள்ளதென கூறியிருப்பது தொடர்பாக பதிலளிக்கும்போதே மனோ கணேசன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய வெளியுறுவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதியை விட தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை செலுத்துவதாக தெரிவித்துள்ளமை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

மேற்கண்டவர்களின் தமிழ்மக்கள் மீதான அக்கறை தொடர்பில் எமக்கு பூரணமான திருப்தியில்லை. ஆனால் தமிழக மக்களின்




போராட்டங்கள் எம்மக்களுக்காக உயிரையே துச்சமென மதித்து தீக் குளிக்கின்றமை போன்றவை எம்மை உணர்ச்சி வசப்பட வைத்துள்ளது.

தமிழகத்தில் மட்டுமா எமது உடன் பிறப்புக்கள் வாழும் மலேஷியா உட்பட அனைத்து நாடுகளிலும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

ஆனால் எம் மக்களுக்காக எமது மண்ணில் போராட்டங்களை நடத்த முடியாது எங்களைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள்மீது எந்தவிதமான அக்கறையையும் அரசாங்கம் காட்டுவதாகத் தெரியவில்லை. மாறாக அம்மக்கள் மீதான நெருக்கடிகளே தொடர்கின்றன. (ஓ-6)



தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்கத்தின் 18ஆவது பொதுக்கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ்ப்பாணம் ஒய்வூதியர் சங்க சமாசத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் உரையாற்றுவதையும், தென்மராட்சி உதவிப்பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ,சங்கத்தலைவர் நா.தண்டாயுதபாணி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: சாவகச்சேரி நிருபர்)



மாதகல் சென்ஜோசப் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பண்டத்தரிப்பு வைத்திய அதிகாரி செல்வி திருத்தேவி திருநாவுக்கரசு மங்கள விளக்கேற்றுவதையும்,பாடசாலை அதிபர் வி.நடராசா, சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் என்.துரைராஜா,ஆசிரியர் சே.ஈஸ்வரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

துயரப்படுவோர் அருகிருப்பது சந்தோசப்படுவோருக்குப் பாரமாய் இருக்கும். சந்தோசப்படுவோர் அருகிருப்பது துயரப்படுவோருக்கு இன்னும் பாரமாய் இருக்கும்.

~ கெதே

வலம்புரி

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்ய வாரீர்

வன்னியில் இடம்பெறும் யுத்தத்தினால் தினம் தினம் மக்கள் உயிரிழக்கும் துயரச் செய்தி நெஞ்சை இறுக்குகிறது.

இந்தத் துயரம் எப்போது நின்று போகும் என்ற ஏக்கத்தின் மத்தியில் ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுக்க யாருமே இல்லையா? என்ற ஏக்கமும் கூடவே எம் இதயங்களைக் கனக்க வைக்கின்றன.

இந்நிலையில் வன்னிப் பகுதியிலிருந்து வெளியேறும் மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலும், இராணுவப் பாதுகாப்புடன் கூடிய இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஒரு பகுதி மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவ்விதம் வவுனியா மற்றும் கோப்பாயில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் எல்லாவற்றையும் இழந்து, உடுத்த உடையுடன் வெளியேறியவர்கள்.

இவர்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பில் பொதுமக்களாகிய நாம் எட்டி நிற்பது நியாயமாகாது.

எனவே, எங்கள் உடன் பிறப்புகளுக்கு உதவ அனைவரும் முன்வரவேண்டும்.

உணவாக, உடு புடைவைகளாக, நிதியாக, குழந்தைகளுக்கான பால்மா வகைகளாக பல்வகையில் உதவிகளை நாம் செய்ய முடியும்.

இவ்விதம் உதவிகளை வழங்கும்போது அவற்றின் தரம் பற்றிச் சிந்திப்பது கட்டாயமானதாகும்.

குறிப்பாக உடுபுடைவைகளை வழங்கும் போது அவை புத்தாடைகளாக இருப்பதானது அவற்றைப் பெற்றுக் கொள்பவர்கள் எம் உறவுகள் என்ற உணர்வை உணர்த்துவதாக அமையும்.

இதற்கு மேலாக இத்தகைய உதவிகளைப் பொதுமக்களிடம் சேகரிப்பதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது அரச அதிபரினால் அமைக்கப்பட்ட குழுக்கள் ஈடுபடமுடியும்.

இடம்பெயர்ந்த -யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி செய்ய யாழ்ப்பாண மக்கள் தயாராக இருக்கின்றனர்.

எனினும் அந்த உதவியை யாரிடம் வழங்குவது என்ற 'தெரியாமை' இருக்கவே செய்கிறது.

உதவிகளை வழங்குவது,சேர்ப்பது என அனைத்துக்கும் வேறு வகையிலான வியாக்கியானங்கள் இடம்பெறக் கூடிய இக்காலகட்டத்தில் உதவிகளை வழங்கும் மனித நேயம் மறைமுகப்பட்டிருக்கிறது.

எனவே இத்தகைய மனிதநேய உதவிகளை வெளிக்கொணர்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட குழுவொன்று உதவிகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டால் தாராளமான உதவிகளைப் பெறமுடியும் என்பது அசையாத நம்பிக்கை.

# இடம் பெயர்ந்த மக்களால் நிறைந்து வழியும் வவுனியா பாடசாலைகள்

**உறவுகளை சந்திக்க முடியாத அவலம் தொடர்கின்றது**

மோதல் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வவுனியாவில் உள்ள பாடசாலைகள் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர். பாடசாலைகள் பலவும் இடம் பெயர்ந்த மக்களால் நிறைந்து வழிகின்றன. எனினும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொதுமக்களோ, பொது நிறுவனங்களோ, ஊடகவியலாளர்களோ இந்த இடம் பெயர்ந்த மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ளவர்கள், வன்னியில் இருக்கும் தமது உறவினர்களின் நிலமை குறித்து அறிய முடியாத வர்களாக இருப்பதுடன்,இடம்பெயர்ந்து வந்துள்ளவர்க ளில் தமது உறவினர்களும் இருக்கின்றார்களா என்பதைச் சென்று பார்க்கவோ அல்லது அறிந்து கொள்ளவோ முடி யாத நிலைமையில் உள்ளனர்.

தமது உறவினர்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும். அறிவதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து அதிகாரிகள் அக்கறையற்று இருப்பதாகப் பொது மக்கள் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். அதேவேளை, வன்னிப் பகுதியில் இடம்பெறும் மோதல்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களில் கொல்லப்பட்டோரின் சடலங்கள் வவுனியா வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், இறந்தவர்கள் யார் என்பதைப் பொதுமக்கள் அறியமுடியாதவர்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவர்களின் உடைமையில் உள்ள அடையாள அட்டை மற்றும் ஆவணங்களில் உள்ள விபரங்களைக் கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெளியிடவில்லை என்றும், இதனால் உறவினர்கள், தெரிந்தவர்கள் இருந்தால்கூட, இறந்தவர்களை அடையாளம் காண முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# நாட்டு மக்கள் பொருளாதார யுத்தத்தை எதிர்நோக்கும் காலம் விரைவில் உருவாகும்

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு**

(கொழும்பு)

இந்த நாட்டு மக்கள் பொருளாதார யுத்தம் ஒன்றிற்கு முகம் கொடுக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

சிலாபம் ஹரேத்திர கொரையா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தற்போது யுத்தத்திற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுத்து அதை முன்னெடுத்து செல்கின்றது.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தவில்லை என எதிர்க்கட்சி தலைவர் குற்றம் சுமத்தினார். யுத்தம் குறித்து பேசி மக்களின் கவனத்தை திசை திருப்ப அரசாங்கம் முனைகிறது. எனினும் மக்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன.



இது குறித்து அவதானம் செலுத்தா விட்டால் பெரும் பிரச்சினை உருவெடுப்பதைத் தடுக்க முடியாது.

இந்த நிலையில் செல்லு மானால் யுத்தம் நிறை வடைந்துவிடும். ஆனால் பொருளாதார யுத்தம் ஒன்றிற்கு நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் நிலை உருவாகும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஓ-6)

# சமாதான முயற்சிகளை முறியடிக்கும் சதித் திட்டங்கள் தோற்கடிக்கப்படும்

**ஜனாதிபதி தெரிவிப்பு**



(கொழும்பு)

நாட்டின் சமாதானத்தின் பொருட்டு முன்னெடுத்துச் செல்லப்படும் உயிரோட்டமுள்ள பயணத்தை தடுப்பதற்கு சூழ்ச்சியுடன் செயற்படும் அனைத்து சக்திகளும் தோற்கடிக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கண்டி கெட்டம்பே மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைபப்பின் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

1815ஆம் ஆண்டு மக்கள் இழந்த உரிமைகள் அனைத்தையும் மீண்டும் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முழு வேகத்துடன் செயற்படுகின்றது.

நாட்டின் அபிவிருத்தி மட்டுமன்றி நாட்டின் கௌரவத்தையும் பாதுகாத்து புது யுகம் படைக்க தாம் உறுயளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

# நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து 4 500 புசல் விதை நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள நெற் செய்கைக்கென குடா நாட்டிலுள்ள நெல் உற்பத்தியாளர்களிடமி ருந்து 4 ஆயிரத்து 500 புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் க. சிவலோகநாதன் இதற் கான ஒழுங்குகளை மேற்கொண்டுள் ளனர்.

அவ் இது பற்றி தெரிவிக்கையில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்பட இருக்கும் பெரும் போக நெற்செய்கைக்கென கடந்த ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் 100 விதை நெல் உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தற்பொழுது தெரிவு செய்யப்பட்ட நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து தரமான 'பீ.ஜீ. 406', பீ.டபிள்யூ. 316 போன்ற விதை நெல்லை இச் சங்கம் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

மேற்படி சங்கத்தின் தலைவரும் மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளருமான எஸ். சிவகுமார் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளின் மேற்பார்வையுடன் விதை நெல் உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விதை நெல் உற்பத்தி எஸ்.டி.சி நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த விதை நெல்லில் தரமானவை மேற்படி சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டு அடுத்த பெரும்போக நெற்செய்கையாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஓ-6)

# சர்வமும் சாயி மயம் - பகவான் பாபா

ஒரு முறை அமரேந்திரன் என்பவர் சென்னையில் மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருந்த போது பின்னால் வந்த லொறி ஒன்று மோதியதால் தூக்கி எறியப்பட்டு இடது கால் முறிந்து தொங்கிய நிலையில் காணப்பட்டது. இரத்த வெள்ளத்தில் கிடந்த அவர் தனது வாழ்வு முடிந்துவிட்டது. பகவானே எல்லாம் நீ தான் என்று அடைக்கலம் கேட்ட அக்கணத்துடன் மயங்கி விட்டான். சிறிது நேரத் தில் இவரது உறவினர் ஒருவர் கண்டு அமரேந்திரனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்தார். சத்திர சிகிச்சை செய்வதற்கு சிகிச்சைப்பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் மயக்க மருந்து கொடுப்பதற்கு அந்நேரத்தில் மயக்க மருந்து கொடுக்கும் வைத்தியர் இல்லை என்று எல்லோரும் தத்தளித்த வண்ணம் இருந்தனர்.



அந்நேரம் விஜயகுமார் என்ற ஒரு வைத்தியர் வந்து மயக்க மருந்து ஏற்றி, சத்திர சிகிச்சையும் வெற்றியாக முடிந்து விட்டது. இருந்தும் திடீரென வந்த வைத்தியர் விஜயகுமாருக்கு நன்றி சொல்வதற்காக தேடினார்கள். ஆனால் அவரைக் காணவில்லை. ஆனால் அமரேந்திரன் மயக்கம் தெளிந்தும் தெளியாத நிலையில் பகவான் தனக்கு முன்னே சமூகமளித்ததாகவும், தனக்கு மயக்க ஊசி போட்டதாகவும் பிதற்றிக்கொண்டிருந்தார்.

எல்லாம் சாயி மயம். இது சாயி யுகம் என்று உலகம் முழுவதையும் தனது கைகளில் அடக்கி அன்புக்கிரணங் களை மூலை முடுக்கெல்லாம் பரவச் செய்து தன்னை நாடி ஓடி வரும் பக்தர்களை துன்பம் தெரியாத இன்ப வாழ்வினில் திளைக்க வைக்கிறார். இதைவிட விசித்திரமானதும் விசேடமானதும் உலகில் வேறு ஒன்றும் இல்லை. அடியார்களுக்கு அள்ளி வழங்கவே பகவான் இவ் அவதாரத்தை எடுத்தாரே ஒழிய எங்களிடம் எதையும் எடுத்திட வரவில்லை. அவ் இறைவன் தனது இரண்டு கைகளிலும் அள்ளி அருளும் அருளினை , கிருபையினை நம் வெள்ளை உள்ளத்தால் நிரப்பி நித்தமும் சாயி நாதனை சேர்ந்திடுவோம்.

பர்த்திபுரி வைகுண்டத்தை நினைக்க வைக்கிறது வைகுண்டம் கண்ணால் கண்டதில்லை. உள்ளத்தால் அனுபவித்ததில்லை. ஆனால் புட்ட பர்த்தி பிரசாந்தி நிலையம் பூலோக வைகுண்டம் என்று பிரசித்தி பெற்றது. பூரண அவதாரனான சாயி பகவானின் அவதாரத்தின் காரணமாக புட்டபர்த்தி என்று மகாசேத்திரமாகிவிட்டது.


**ஜெய் சாயிராம்**

இதில் நரனும்,நாராயணனும் சேர்ந்திருப்பதே சாயிமாதாவின் லீலாவிநோதம். பகவானை விட பக்தனே பெரியவன் என்பார் சுவாமி. ஏனெனில் பகவான் பக்தனின் இதயத்தில் குடி இருப்பார். பக்தனின் இதயமே பகவானின் கோயில் இவ்வாறு குடியிருப்பதற்கு நம் இதயம் கள்ளமில்லா வெள்ளை உள்ளமாய் எந்நேரமும் சாயிமாதாவை உச்சரிக் கட்டும்.

யாதவன்

# இந்திய அரசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி தமிழ் நாட்டு மக்கள் தண்டிக்க வேண்டும்

## திருமாவளவன் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைப் பிரச்சினையில் இழைத்த துரோகங்களுக்காக இந்திய அரசைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி, தமிழ்நாட்டு மக்கள் தண்டிக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் வலியுறுத்தினார்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்திய அரசின் துரோகம் தொடர்கிறது. இதற்காக என்றாவது ஒரு நாள், தமிழ்நாட்டு மக்கள் இந்திய அரசை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, தண்டிக்க வேண்டும். தமிழர்களுக்கு எதிராக துரோகம் செய்யும் காங்கிரஸ் கட்சிக்கு வரும் மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் பாடம் புகட்ட வேண்டும். அவர்களுக்கும், அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் தமிழ் நாட்டில் ஓர் இடம் கூட இல்லை என்ற நிலை உருவாக வேண்டும்.

இலங்கையில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான உள்நாட்டுப் பிரச்சினையில் இந்திய அரசு குறுக்கிட்டது தவறு. அவர்கள் இரு தரப்பினரும் விரும்பாத இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இந்திய அரசு திணித்தது தவறு.

தமிழ்ப் போராளிகளுக்கு இந்திய மண்ணில் ஆயுதப் பயிற்சி அளித்தது தவறு. அந்த வகையில் இலங்கையின் இறையாண்மையில் இந்திய அரசு தலையிட்டுள்ளது. இதற்காக சர்வதேச நீதிமன்றத்தில் இந்திய அரசு நிறுத்தப்பட வேண்டும்.

தமிழர்களை படுகொலை செய்ய, இந்திய அரசு இலங்கை இராணுவத்துக்கு உதவியுள்ளது. இதற்காக மனித உரிமை மீறல் குற்றத்துக்கும் இந்தியா ஆளாகியுள்ளது. அதுவும் விசாரிக்கப்பட வேண்டும் என்று திருமாவளவன் கூறினார். (ஓ-6)

# இலங்கைப் பிரச்சினை குறித்து மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்

## மனித நேய மக்கள் கட்சி வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கைப் பிரச்சினை குறித்து மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று மனித நேய மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது. இது குறித்து அக்கட்சியின் பொதுச் செயலர் ப. அப்துல் சமது செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் போர் என்ற பெயரால் இலங்கை இராணுவம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இப்பிரச்சினையில் மத்திய அரசு இதுவரை காட்டி வந்த மெத்தனத்தை மனிதநேய மக்கள் கட்சி கண்டிக்கிறது.

முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் அனைவருக்கும் அந்நாட்டில் சம உரிமையும், சமநீதியும் உறுதி செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காக்க மத்திய அரச இதுவரை உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதே தமிழ் மக்களின் உணர்வாக உள்ளது. அமெரிக்காவுடனான அணுசக்தி உடன்பாட்டில் காட்டிய அக்கறையை இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிரைக் காக்கும் விஷயத்தில் மத்திய அரசு காட்டவில்லை.

போரை நிறுத்தும் சக்தியுள்ள இந்தியா இத்தனை வற்புறுத்தல்களுக்குப் பிறகும் செவிசாய்க்காதது கண்டனத்துக்குரியது. இப்பிரச்சினையில் இதுவரை மேற்கொண்ட நிலைப்பாடுகளை மத்திய அரசு வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று அப்துல் சமது வலியுறுத்தியுள்ளார். (ஓ-6)

## பாரதச் செய்திகள்

### இலங்கையில் போர் நிறுத்தம் கோரி பெப். 16 இல் வழக்கறிஞர்கள் மாநாடு

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, மதுரையில் இம்மாதம் 16 ஆம் திகதி வழக்கறிஞர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

உயர் நீதிமன்றக் கிளை மற்றும் மதுரை மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள், தென் மாவட்ட வழக்கறிஞர்களின் ஆலோசனைக் கூட்டம் மதுரையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இலங்கைத் தமிழர்களை பாதுகாக்கவும், நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படவும் வலியுறுத்தி, நீதிமன்றப் புறக்கணிப்பை இம்மாதம் 18 ஆம் திகதி வரை தொடர்வது என்றும், 16 ஆம் திகதி உயர் நீதிமன்றக்கிளையிலிருந்து ஊர்வலமாக மதுரை சென்று தமுக்கத்தில் மாநாடு நடத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஓ-6)

# இலங்கையில் போர் நிறுத்தமே முக்கியம்; தி.மு.க. ஆட்சியை கவிழவிடமாட்டோம்

## பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதே முக்கியம். தி.மு.க ஆட்சியைக் கவிழ்ப்பது எங்கள் நோக்கமல்ல. கவிழவும் விடமாட்டோம் என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் கலந்து கொண்டு ராமதாஸ் பேசுகையில்,

அடுத்து நடைபெறவுள்ள ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கான ஏற்பாட்டை ஜப்பான் நாடு செய்துள்ளது.

அதேபோல் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை விவாதத்துக்கு வரவுள்ளது. இலங்கைப் பிரச்சினையில் சமாதான தூதராகப் பணியாற்றத் தயார் என கிழக்கு தைமூர் அதிபர் அறிவித்துள்ளார். இவையெல்லாம் மகிழ்ச்சியைத் தரும் செய்திகள்.

இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கான போரில் இந்திய அரசின் ஒத்துழைப்பும், உதவிகளும் பெரும் திருப்தியைத் தருவதாக இலங்கை அதிபர் ராஜபக்ஷ வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். இதிலிருந்து இந்திய அரசின் துரோகம் தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவுக்கு இலங்கை அரசால் பல ஆபத்துகள் வரவுள்ளன. மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கான சதித்திட்டமே இலங்கையில் தான் தீட்டப்பட்டது என நாங்கள் சந்தேகிக்கிறோம்.


இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் முதல்வர் கருணாநிதி விரைவிலேயே முழு ஆரோக்கியம் பெற வேண்டும். இலங்கைப் பிரச்சினையால் ஆட்சி கவிழ்ந்து விடும் என அவர் பயப்பட வேண்டாம். இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் என்பதே எங்கள் நிலை. தி.மு.க ஆட்சியைக் கவிழ்ப்பது எங்கள் நோக்கமல்ல.

ஒருவேளை இலங்கைப் பிரச்சினைக்காக தி.மு.க ஆட்சி கவிழும் சூழல் ஏற்பட்டால் எங்கள் கட்சியின் 18 எம்.எல்.ஏ.க்களும் தி.மு.க. ஆட்சியைக் காப்பாற்றுவார்கள் என்றார் ராமதாஸ். (ஓ-6)

# பொய்யே பேசுவோம் என்பவர்களிடம் நாம் என்ன செய்ய முடியும்?

## ராமதாஸின் கூற்று குறித்து கருணாநிதி

(சென்னை)



"இலங்கைப் பிரச்சினையில் பொய்யைத் தான் பேசுவோம் என கங்கணம் கட்டிக் கொண்டு பேசுபவர்களிடம் நாம் என்ன செய்ய முடியும்?" என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.க செயற்குழுக் கூட்ட தீர்மானத்தில் "போர் நிறுத்தம்" பற்றிய வாசகங்கள் இல்லை என பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கூறியிருந்தார். அவருக்கு பதில் அளிக்கும் வகையில், கேள்வி - பதில் வடிவில் முதல்வர் கருணாநிதி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானத்தின் முன் பகுதிகளிலேயே போர் நிறுத்தம் பற்றியெல்லாம் சொல்லப்படிருந்தாலும், நிறைவாக முடிக்கும் போது - "அந்த நாட்டில் போர் நிறுத்தம் ஏற்பட்டு, அமைதியான நிலை தோன்றவும்" என்ற வாசகங்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

ஆனால், தீர்மானத்தில் "போர் நிறுத்தம்" பற்றியே வாசகங்கள் இல்லை என்பதைப் போல பேசுகிறார்கள். பொய்யைத்தான் பேசுவோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு பேசுபவர்களிடம் நாம் என்ன செய்ய முடியும்?

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு என்ற பெயரால் இங்குள்ள தமிழர்கள், குறிப்பாக காங்கிரஸ் போன்ற கட்சிக்காரர்கள் தாக்கப்படுவதும், அந்தக் கட்சிக்காரர்களின் அலுவலகங்கள் சூறையாடப்படுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு என்று கூறிக் கொண்டு இங்குள்ள தமிழர்களைத் தாக்குபவர்களை அடையாளம் கண்டு கொண்டால் போதும். அப்படிப்பட்ட செயல்களை நான் கண்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினைக்காக யாரும் சட்டத்தை கையில் எடுக்காமல், காவல் துறையினரிடம் புகார் செய்வதே நல்லது என்றார்.

இதேவேளை கேள்வி - பதில் அறிக்கையில், ஒரு தலைவர் சொல்கிறார் என்று குறிப்பிடுவதைப் பற்றி இராமதாஸ் வருத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட ஆளுநர் உரையில், மதுவிலக்குப் பிரச்சினை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதில், இராமதாஸ் என்னைச் சந்தித்தது பற்றியெல்லாம் அவர் பெயரைக் குறிப்பிட்டுத் தான் உரை தயாரிக்கப்பட்டது.

ஆனால், கேள்வி - பதில் பகுதியில், நான் பதிலளிக்கும் போது அவருடைய பெயரைக் குறிப்பிட்டு, அதற்குப் பதில் என்று சொன்னால் படிப்பவர்களுக்கு அது நயத்தக்க நாகரிகமாக இருக்காது. இதனால், பெயரைக் குறிப்பிடாமல் ஒரு தலைவர் என்று மரியாதையோடு குறிப்பிட்டிருக்கிறேன்' என்று தனது அறிக்கையில் முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார். (ஓ-6)

# "நான் கடவுள்" படம் பார்த்த ரஜனிகாந் இயக்குனர் பாலாவுக்கு பாராட்டு

(சென்னை)



சேது, நந்தா, பிதாமகன் படங்களை அடுத்து பாலா டைரக்ஷனில் தயாரான படம், "நான் கடவுள்' இந்த படம் சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கிறது. ஆர்யா, பூஜா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து இருக்கிறார்கள்.

இந்த படத்தின் சிறப்பு காட்சி, ரஜினிகாந்துக்காக சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள போர் பிரேம் தியேட்டரில் திரையிடப்பட்டது. படம் பார்க்க வந்த ரஜினிகாந்தை ஆர்யா, பாலா ஆகிய இருவரும் வரவேற்றார்கள்.

படம் பார்த்துவிட்டு வெளியே வந்த ரஜினிகாந்த் ஆர்யா, பாலா இருவரையும் பாராட்டினார். பாலாவை பாராட்டி ஒரு கடிதமும் அனுப்பினார். அந்த கடிதத்தில், ரஜினிகாந்த் எழுதியிருப்பதாவது,

"திரையுலக வரலாற்றில், 'நான் கடவுள்' போன்ற படம் இதுவரை வந்ததில்லை. பொதுவாக அனைவருக்கும் அவர்களுடைய வாழ்க்கை, சமூக வாழ்க்கை, அன்றாட அரசியல் வாழ்க்கையைப் பற்றித்தான் தெரியும்.

ஆனால் இவ்வுலகில், இந்த சமுதாயத்தில் நமக்கு தெரியாத எத்தனையோ வாழ்க்கைகள் இருக்கிறது.

இதில், நிழல் உலக தாதாக்களிடம் சிக்கித் தவிக்கும் பிச்சைக்காரர்களுடைய வாழ்க்கை, ஆன்மீகத்தில் இருக்கும் 'அகோரி பாபா' க்களின் வாழ்க்கைகளை அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. இந்த இரண்டு வாழ்க்கைகளையும் யதார்த்தமாக திரையில் கொண்டு வந்திருக்கும் பாலாவின் அசாத்திய முயற்சிக்கும், திறமைக்கும் நான் நெஞ்சுருகி, தலை வணங்கி, அவரை பாராட்டுகிறேன்.

இமயமலையில் நான் பல அகோரிகளை சந்தித்தவன் என்ற முறையில், ஆர்யாவின் யதார்த்தமான 'அகோரி' நடிப்பு என்னை பிரமிக்கவைத்தது. இளையராஜாவின் பின்னணி இசை, என்னை மெய்சிலிர்க்க வைத்தது. படத்தில் நடித்திருக்கும் அனைத்து ஊனமுற்றவர்களின் நடிப்பு, என கண்களை கலங்க வைத்தது.

இந்த மாதிரி ஒரு திரைக்காவியம் தமிழில் வந்தது, என் தலையை நிமிர வைத்தது. இது மாதிரி ஒரு படம், இனிமேல் வரப்போவது இல்லை. இந்த படத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் என் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள். இவ்வாறு அந்த கடிதத்தில் ரஜினிகாந்த் எழுதியிருக்கிறார். (ஓ-6)

# அணித்தலைவர் பதவியிலிருந்து மஹேல ஜெயவர்த்தனா இராஜினாமா

## பாகிஸ்தான் டெஸ்ட் தொடருக்கு பின் என அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக மஹேல ஜெயவர்த்தனா அறிவித்துள்ளார்.

இத் தீர்மானம் பாகிஸ்தான் அணியுடனான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருடன் நடைமுறையாகுமென அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மஹேல ஜெயவர்த்தனா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பாகிஸ் தான் சுற்றுப்பயணத்திற்கு பின்னர் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார்.

இதுவரை 26 டெஸ்ட் போட்டிகளுக்கு அணித்தலைவராக செய்யற்பட்ட மஹேல ஜெயவர்த்தனா இலங்கை அணிக்கு 15 வெற்றிகளை தந்துள்ளார். 7 டெஸ்ட் தோல்வியிலும் 4 டெஸ்ட் சமனிலையிலும் முடிபடைந்துள்ளது.

94 ஒருநாள் போட்டிகளுக்கு அணித்தலைவராகவிருந்த ஜெயவர்த்தனா இலங்கை அணிக்கு 54 போட்டிகளில் வெற்றியை பெற்று கொடுத்ததுடன் 35 போட்டிகளேயே தோல்வியை சந்தித்துள்ளார்.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாக அதிகாரி துலிப் மென்டிஸ் கூறுகையில்,

ஜெயவர்த்தனாவின் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டது. பாகிஸ்தான் சுற்றுப் பயணத்திற்கு பின்பு இலங்கையில் நடக்கவிருக்கும் சிம்பாவே அணிக்கு எதிரான தொடருக்கு புதிய அணித் தலைவர் தேர்வு செய்யப்படுவார் என்றார்.

இதேவேளை அண்மையில் நடந்து முடிந்த இந்திய அணியுடனான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி 1:4 என்ற கணக்கில் தோல்வியடைந்தமையடுத்து நேற்று முன்தினம் நடந்த ஒரேஒரு இருபது-20 போட்டியிலிருந்து மஹேல ஜெயவர்த்தனா நீக்கப்பட்டு டில்சானுக்கு அணித்தலைவர் பதவி வழங்கப்பட்டது.

இதன் காரணமாகவே இராஜினாமா முடிபை மஹேல ஜெயவர்த்தனா எடுத்துள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

(5)

## ஐ.சி.எல். வீரர்களுக்கு உள்ளூர் போட்டிகளில் விளையாட அனுமதி

(கராச்சி)

ஐ.சி.எல்லில் விளையாடிய பாகிஸ்தான் வீரர்கள் உள்ளூர் போட்டிகளில் பங்கேற்கலாம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.

ஐ.சி.எல். போட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

இதேபோல ஐ.சி.எல். போட்டிகளில் விளையாடிய பாகிஸ்தான் வீரர்களும் உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் அனுமதி அளிக்கவில்லை.

இந்நிலையில் ஐ.சி.எல். போட்டியில் விளையாடிய பாகிஸ்தான் வீரர்கள் உள்ளூர் போட்டிகளில் விளையாட தடையில்லை என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் தடை ரத்து செய்யப் பட்டதை அடுத்து அந்நாட்டு கிரிக்கெட் சபை இந்த முடிபை எடுத்துள்ளது.

(5)

## தென்னாபிரிக்கா 'நம்பர்-1'

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டி சிறந்த அணிகள் தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்கா முதல் இடத்தை உறுதிசெய்து கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் வெற்றி பெற்றதை அடுத்து தென்னாபிரிக்கா உலக சம்பியன் அவுஸ்திரேலியாவிடமிருந்து முதல் இடத்தை தட்டிப் பறித்தது. இதனிடையே இலங்கைக்கு எதிரான தொடர் வெற்றி மூலம் இந்தியா 2ஆவது இடத்திற்கு முன்னேறியது.

எனினும் கடைசி போட்டியில் தோல்வி அடைந்ததன் விளைவாக இந்தியா மீண்டும் 3ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டது. இதனிடையே அவுஸ்திரேலிய-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 4ஆவது போட்டி நேற்றுமுன்தினம் அடிலெய்ட்டில் நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதன் மூலம் தொடர் சமன் ஆனது. இந்த போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றதன் மூலம் தரவரிசையில் தென்னாபிரிக்காவின் முதலிடம் உறுதியாகிஉள்ளது. இந்த ஆண்டுக்கான தரவரிசையை முடிபு செய்யும் அவகாசம் ஏப்ரல் மாதம் வரை உள்ளது.

ஆனால் ஏப்ரல் மாதம் வரை வேறு எந்த அணியாலும் தென்னாபிரிக்க அணியின் புள்ளிகளை பெற முடியாது. நியூசிலாந்துக்கு மட்டுமே அந்த வாய்ப்பு இருந்தது.

நியூசிலாந்து நேற்று முன்தினம் தோல்வி அடைந்ததால் தென்னாபிரிக்காவின் முதலிடம் உறுதியாகி உள்ளது. முதலிடத்தை பிடித்துள்ள தென்னாபிரிக்காவுக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் டொலர் பரிசு வழங்கப்பட வுள்ளது.

## கல்லூரி மாணவியை காதலிக்கிறார் தோனி

(அவுரங்காபாத்)

இந்திய கிரிக்கெட் அணியை புகழின் உச்சிக்கு அழைத்து சென்றவர் தோனி. அவர் தலைவர் பதவியை ஏற்றபின்னர் இந்திய அணி வரலாற்று சிறப்புமிக்க வெற்றிகளை பெற்றுள்ளது.

அணித்தலைவர் பதவியில் மட்டுமின்றி துடுப்பாட்டத்திலும் அவர் தொடர்ந்து முத்திரை பதித்து வருகிறார். அதிரடியான ஆட்டம் மூலம் இளம் ரசிகைகளின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

இந்தியாவின் விலை மதிப்புமிக்க அவரை திருமணம் செய்ய ஒவ்வொருவரும் போட்டி போடுகின்றனர். தோனி முதலில் நடிகை தீபிகா படுகோனேயுடன் சுற்றித் திரிந்தார். பின்னர் நடிகை லட்சுமிராயுடன் இணைந்து சுற்றினார்.

இவர்களை எல்லாம் கைகழுவி விட்டு தோனி தற்போது புதிய காதலியை தேர்ந்தெடுத்துள்ளார். கல்லூரி மாணவியான சாக்சிசிங் ராவத்தை தோனி காதலிக்கிறார்.

இவர் அவுரங்காபாத்தில் உள்ள கல்லூரியில் ஹோட்டல் மானேஜ்மென்ட் படித்து வருகிறார். சமீபத்தில் தாஜ்பெங்கால் ஹோட்டலில் அவர் தனது பயிற்சியை முடித்தார். அப்போதுதான் தோனியும், சாக்சியும் சந்தித்து கொண்டனர்.

பின்னர் நடிகை பிபாஷாபாசு அளித்த விருந்தில் இருவரும் பங்கேற்றனர். சாக்சி தனது 21ஆவது பிறந்த நாளை கடந்த சில மாதங்களுக்கு முன்பு கொண்டாடினார். அதில் தோனியும் கலந்து கொண்டார். இருவரும் ஒன்றாக பல இடங்களுக்கு சுற்றித் திரிந்தனர்.

சாக்சி சிங்கை திருமணம் செய்ய தோனி முடிபு செய்துள்ளார். 2010ஆம் ஆண்டுக்கு பின்னர் இருவரது திருமணம் நடைபெறும். இதை சாக்சி சிங்குக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர்.

சாக்சி சிங்கின் சகோதரியும், உத்ராஞ்சல் பொலிஸ் அதிகாரியுமான அபிலாசா டெலிவிஷன் பேட்டியில் கூறும் போது, இருவரும் நல்ல நண்பர்கள் சாக்சியின் படிப்பு முடிந்த பின்னர் அவரது திருமணம் என்றார்.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 05






அவுஸ்திரேலியாவுடனான தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை தோல்வியடைந்த நிலையில் அணி 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 முதல் செப்ரம்பர் 2ஆம்திகதிவரை கொழும்பு ஆர்.பிரேமதாச (அப்போதைய பெயர் கேத்தாராம) விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் முத்தையா முரளிதரன் டெஸ்ட் அரங்கில் அறிமுகமானார்.

அப்போது முரளிதரன் வயது 20,4 மாதம் 11 நாட்கள் ஆகும். இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்கா முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 247 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் தனது அறிமுகப் போட்டியின் முதலாவது இனிங்ஸில் முரளிதரன், அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளரும் 9ஆவது நிலை துடுப்பாட்ட வீரருமான மைக்டேர்மோட்டை 9 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழப்பு செய்து டெஸ்ட் அரங்கில் தனது விக்கெட் கணக்கை ஆரம்பித்தார்.

இந்த இன்னிங்ஸில் 17 ஓவர்கள் பந்துவீசிய முரளிதரன் 2 ஓட்டமற்ற ஓவர் உட்பட 32 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை சாய்த்தார்.

இப்போட்டியில் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 விக்கெட்டுக்களையிழந்து 258 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

**பாலா**

இதில் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய முரளிதரன் 2 பந்துகளை எதிர்கொண்டு ஓட்டமெத னையும் எடுக்காமல் ஆட்டமிழக்காமலிருந்தார்.


தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை மாத்திர மிழந்து 296 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதில் முரளிதரன் 34 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 109 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட் டுக்களைப் பதம்பார்த்தார்.

இதில் முரளிதரன் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மோடியை 54 ஓட்டங்களுடன் நேரடியாக போல்ட் செய்து ஆட்டமிழப்பு செய்ததுடன் அடுத்த பந்துவீச்சில் மார்க்வோவை ஓட்டமெதனையும் எடுக்க விடாமல் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றி அசத்தினார்.

இதன் மூலம் தனது அறிமுக டெஸ்ட் போட்டியில் முரளிதரன் இரு இன்னிங்ஸிலுமாக 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

*(பயணிக்கும்)*

## எண் விளையாட்டு- 10



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

*நேற்றைய பகுதிக்கான விடை*



## தமிழ் மக்கள்...

குறித்து இந்தியாவை நம்பியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் பாதுகாப்பு குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தியுள்ளோம் என முகர்ஜி பதிலளித்துள்ளார். அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்துவதே முதலில் அவசியமானது என்றார் அவர்.

இதேவேளை இலங்கை இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு அப்பால் சென்று கூட தீர்வை முன்வைக்கத் தயார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இலங்கை விஜயத்தின் போது கூறியிருப்பதாக முகர்ஜி முன்னர் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## சர்வதேச...

சேவைகள் முடங்கியிருப்பதுடன், காயமடைந்த மக்கள் மற்றும் பல நோயாளர்கள் வெளியேற்றப்பட வேண்டியிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது.

(ச-5)

## மக்கள்...

தடுப்பதற்காகவே இந்தத் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை விடுதலைப் புலிகள் பொதுமக்கள் மீது நடத்தியிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும் காயமடைந்தவர்களையும் வவுனியா மற்றும் அநுராதபுரம் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்ததாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது. (ச-5)

## குருவிக்குளம்...

பரந்தன் பிரதேசத்துக்கு மேற்காக 16 கிலோமீற்றர் தூரத்தில் அடர்ந்த காட்டுப்பகுதியில் அமைந்துள்ள இப்பிர தேசத்தில் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களையும் படையினர் மீட்டெடுத்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவில் எஞ்சியுள்ள புலிகளின் பிரதேசங்களை நோக்கி பாதுகாப்புப் படையினர் முன்னேறி தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும் அவர்மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# பி.பி.சி நிறுத்தப்பட்டதால் அரசுக்கு 3 மில்.ரூபா நட்டம்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒலிபரப்பாகி வந்த பிரித்தானியாவின் பிபிசி செய்திச் சேவை நிறுத்தப்பட்டமையினால் அரசாங்கத்திற்கு மாதாந்தம் மூன்று மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்ப அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்ற போது தற்போதைய நிலைமைகள் குறித்து அமைச்சர் லக்ஸ்மன் யாப்ப அபேவர்த்தன அங்கு விளக்கமளித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிபிசி சிங்கள சேவையின் கொழும்பில் உள்ள ஊடகவியலாளர் எல்மோ பெர்னாண்டோவுக்கு தனிப்பட்ட முறையில் கருத்து கூறியபோதே லக்ஸ்மன் யாப்ப அபேவர்த்தன இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒலிபரப்பப்பட்ட பி.பி.சி நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டமை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் இன்று தீர்மானிக்கவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தமது நிகழ்ச்சிகளை முழுமையாக ஒலிபரப்பாமல் தலையிட்டு குழப்புவதாகக் கூறி பி.பி.சி செய்திச் சேவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒலிபரப்பான அனைத்து நிகழ்ச்சிகளையும் இடைநிறுத்தியது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாகவும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராயப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த வியடம் தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவருடன் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிப்போம் இணைந்து செயற்படுவதையே நாங்கள் விரும்புகிறோம் கலந்துரையாடலின் பின்னர் என்ன செய்வது எனத் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர், இதுவரை தாம்.பி.பி.சி நிறுவன அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தவில்லையெனத் தெரிவித்தார்.

இதேவேளை பி.பி.சியின் நிகழ்ச்சிகள் இலங்கையில் இடை நிறுத்தப்பட்டமையால் தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமை மறுக்கப்பட்டிருப்பதாக சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனில் ஜெயசேகர கூறினார்.

பொதுமக்களுக்கு தகவல்கள் சென்றடைவதைத் தடுக்கும் அரசாங்கத்தின் ஒரு நடவடிக்கையே இது எனவும் அவர் தெரிவித்தார்.

(ச-5)

## தமிழ் மக்களின் மீது ஐ.தே.கவுக்கு...

போன்று ஏனையோரும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்வார் கள் என்று நாம் நம்புகிறோம் எனவும் அவர் கூறினார்.

நேற்றுத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த திங்களன்று விசுவமடுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சிவிலியன்கள் மீதான தாக்குதலை அமெரிக்கா, இந்தியா மற்றும் தமிழ்க்கட்சித் தலைவர்கள் தமது கண்டனத்தை தெரிவித்திருந்தனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தொடர்ந்தும் மக்கள் வந்தவண்ணமுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளை அரசு வழங்கி வருகின்றது.

நேற்று முன்தினம் சர்வதேச ஊடகங்களுக்கு வன்னிக்கள நிலைவரம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. உரிய ஆவணங்களுடனனேயே விளக்கமளிக்கப்பட்டது. இப்போது சிவிலியன்களைத் தாக்குவது அரசா அல்லது விடுதலைப் புலிகளா என்று வெளியுலகிற்குத் தெரியவந்திருக்கும்.

புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள வைத்தியசாலை பாதுகாப்பு அற்ற பிரதேசத்தில் அமைந்துள்ளதாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனால்தான் அங்குள்ள 240 பேரையும் பாதுகாப்புப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லுமாறு அரசு செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு பணிப்புரை விடுத்தது.

அரசு நேற்று முன்தினம் கிறீன் ஓசியன் கப்பல் மூலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு 240 பேரையும் மற்றும் அவர்களுக்கு உதவியாக 116 பேரையும் கொண்டு வந்தனர்.

அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. கிறீன் ஓசியன் திருகோணமலைக்கு மக்களை ஏற்றிச் செல்லும் ஒரு கப்பல் சேவையாகும்.

அரசு தனது கடமையை சிறப்பாகவே செய்து வருகிறது. நோயாளர்கள் அழைத்து வரப்பட்டபோது 4 மணிநேர யுத்த நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சி இந்தத் தாக்குதலுக்கு எவ்வித கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. அதாவது புலிகள் மீதான தனது எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. ஐ.தே.கவுக்கு தமிழ் மக்கள் மீது எந்தவித அக்கறையும் இல்லை என்பது இதிலிருந்து தெரிகிறது.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கூட இது குறித்து எதிர்ப்புத் தெரிவித்தன. யுத்தம் முடிபடைந்தால் பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று ஐ.தே.க. கோஷம் எழுப்புகிறது.

யுத்தம் முடிந்தாலும் இரண்டாம் கட்ட யுத்தம் ஒன்றும் அரசுக்கு உண்டு. அதாவது மீட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கி அவர்களுக்குரிய இடங்களில் அவர்களைக் குடியமர்த்த வேண்டும்.

கண்ணிவெடிகளை அகற்றி அவர்களைப் பாதுகாப்பாக வாழவைப்பதே அரசின் இரண்டாவது கட்ட பாரிய யுத்தமாகும். இன்று சர்வதேச சமூகமே எம்மைப் பாராட்டுகிறது. வடமத்திய,மத்திய மாகாணத் தேர்தல்களில் நூற்றுக்கு 85 சதவீத வெற்றியை நாம் நிச்சயம் பெறுவோம் என்பது உறுதி என்றார்.(ச-5)

## தற்கொலைத் தாக்குதலுக்கு...

கணக்கில் கொல்லப்பட்டும் காய மடைந்தும் வருகின்றனர். அரச படைகள் வேண்டும் என்றே திட்டமிட்டு இந்த இனப் படுகொலையை அரங்கேற்றி வருகின்றது.

குறிப்பிட்ட சில பிரதேசங்களை பாதுகாப்புப் பிரதேசங்கள் எனப் பிரகடனப்படுத்திவிட்டு அப்பிரதேசத்திற்குள் மக்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையும் ஐக்கியநாடுகள் சபையின் அமைப்புகளையும் வரவழைத்து பீரங்கித் தாக்குதல்களையும் வான் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளும் இதற்கு கண்கண்ட சாட்சிகளாக உள்ளன.

இங்குள்ள மருத்துவமனைகள் எல்லாவற்றின் மீதும் ஆட்டிலறி எறிகணைகளை வீசி செயலிழக்கச் செய்துள்ளனர்.

அழிவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இந்த மக்களின் அவலங்களை வெளியுலகத்திற்கு போகவண்ணம் தொலைத்தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்களோ அனைத்துலக தொண்டு நிறுவனங்களோ மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்கான கண்காணிப்பாளர்களோ எமது பிரதேசத்திற்குள் வருவது சிங்கள அரசினால் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்திற்குள் கொண்டுவரப்படும் அத்தியாவசிய மருந்துகள் மீதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாரிய காயங்களுக்கு உள்ளாகும் மக்கள் மருந்தின்மையால் நாளாந்தம் இறந்து கொண்டே இருக்கின்றனர். போர் நடக்கும் பிரதேசத்திற்குள் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும் அரசினால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மக்கள் நாளாந்தம் நாடோடிகள் போன்று இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர். காடுகளிலும் மேடுகளிலும் விலங்குகளை விட மோசமான முறையில் வாழ்க்கை நடத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும் 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தும் அல்லற்பட்டவண்ணமுள்ளனர்.

21ஆம் நூற்றாண்டின் படுமோசமான மனித அவலம் தமிழ் மண்ணில் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த மனித அவலத்தை முழுஉலக நாடுகளும் கண்டிப்பதோடு நின்றுவிடாமல் அரசுக்கு அழுத்தம் கொடுத்து போரை நிறுத்தி அரசியல் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வரவேண்டும்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் அப்பாவிப் பொதுமக்கள் மீது உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகளை வீசிவிட்டு நாம் பொதுமக்கள் மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டதாக பொய்யான பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான மனித சமுதாயம் வெறுக்கத்தக்க காட்டுமிராண்டித்தனமான செயலை நாம் புரியவில்லை என முற்றாக மறுக்கிறோம்.

எமது பிரதேசத்திற்கான தொலைத்தொடர்புகளை துண்டித்துவிட்டு தமது ஊடகங்கள் ஊடாக அரசு பொய்யான பிரசாங்களை மேற்கொண்டு வருகின்றது என்பதை அனைத்துலக சமூகத்திற்கு தெளிவுபடுத்த விரும்புகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-1)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு...

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் எஸ்.கிருஷ்ணகுமார் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 447 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டுமென வடக்கு மாகாண விஷேட செயலணித் தலைவரும் சமூக சேவைகள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கேட்டிருந்தார். இதையடுத்து ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி கல்வி அமைச்சு, வடக்கு மாகாணக் கல்வியமைச்சுடன் இணைந்து மேற்படி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டது.

இதன் முதற்கட்டமாக கல்விவலய ரீதியாக 447 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதுதொடர்பில் வெளியான செய்திக் குறிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகத்தேர்வில் தோற்றிய 447 பேருக்கு வலய ரீதியாக நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளது. இதற்கான நேர்முகத்தேர்வுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி யாழ். வலயம் - 12.02.2009, வலிகாமம் வலயம் -13.02.2009, தென்மராட்சி / வடமராட்சி வலயங்கள் -14.02.2009, தீவக வலயம் -16.02.2009 என நேர்முகத் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

ஏற்கனவே நேர்முகத் தேர்வில் தோற்றாது தவறவிடப்பட்டுள்ள 42 பேருக்கான நேர்முகத்தேர்வு 17.02.2009 அன்று யாழ். வலயத்தில் நடைபெறவுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விஷேட செயலணித் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக யாழ்.தொண்டர் ஆசிரியர்களின் ஆசிரிய நியமனத்திற்கான மேற்படி நேர்முகத்தேர்வுகள் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## வன்னியில் இருந்து வெளி...

இது குறித்து தமிழ்நெற்றில் கூறப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் வைத்தியசாலைகளில் கடமையாற்றி வரும் வைத்தியர்களும் தாதியினரும் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுகிய இடத்தில் அவலப்படும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் சுகாதார நலன்களை பேணிவரும் நிலையில் சுகாதார அமைச்சினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கான தீர்மானம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அமைச்சின் அலுவலகத்தினுடாக வெளியிடப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து அரசாங்க அதிபர், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் என அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவரும் நிலையில் அங்குள்ள பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அரச அதிபரின் வெளியேற்றத்தின் பின்னர் அங்குள்ள பொதுமக்களுக்கான நிவாரணப் பொருட்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதிக்கு ஜனவரி 29ஆம் திகதிக்குப் பின்னர் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவில்லை.

வன்னிப்பகுதிக்கு அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் பொதுமக்களைத் தவிர மற்றவர்களுக்கு செல்லாது என்று உலக உணவுத்திட்டத்தின் அதிகாரிகள் உறுதியளித்தால் மட்டுமே அப்பகுதிக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் விநியோகிக்க அனுமதிக்க முடியும் என்று அந்த அமைப்பிடம் இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. இதனால் வன்னிக்கு உணவு பொருட் கள் விநியோகம் தற்போது தடைப்பட்டுள்ளது.

வன்னிப்பகுதியை விட்டு அரசு ஊழியர்களும் வெளியேறுமாறு இராணுவம் உத்தரவிட்டுள்ளது என தமிழ்நெற்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-1)




## மாதகல் புனித லூர்த்து அன்னையின் வருடாந்த திருவிழா-2009

மாதகல் கடற்கரையில் அழகுற அமைந்துள்ள புனித லூர்த்து அன்னையின் வருடாந்த திருவிழா இம் மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.2009.02.14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நற்கருணை வழிபாடும் 2009.02.15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழா திருப்பலியும் இடம்பெறும். பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கவனத்திற்கு:*

1. கையடக்கத் தொலைபேசியோ கைப்பையோ கொண்டுசெல்ல அனுமதிக்கப்படவில்லை.
2. வர்த்தகர்கள் முன் அனுமதியை நிர்வாகத்திடம் பெற்றுக்கொள்ளவும்.

பங்குத் தந்தையும் பங்குமக்களும். (2247)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.